بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ‘மார்க்க வினா-விடை!’

## மாணவர் - ஆசிரியர் உரையாடல்!

(மார்க்கத்தினை அறிய விழையும் மாணவருக்கும், அவரின் ஆசிரியருக்கும் இடையிலான உரையாடல்கள் இவை. மாணவர் வினா விடுக்க, அதற்கு ஆசிரியர் பதிலுரைக்கிறார். எனவே வினா என்பது மாணவர் விடுக்கும் சந்தேகமும், விடை என்பது ஆசிரியர் அதற்குத் தரும் பதிலுமாகும்.)

**மாணவர் வினா : நாம் எவரின் அடியார்கள்?**

**ஆசிரியர் விடை : நாம் வல்லோன் அல்லாஹ்வின் அடியார்கள்.**

**வினா : அல்லாஹ் என்பது எவரின் பெயர்?**

**விடை : நம்மையும் அகிலமனைத்தையும் படைத்துக் காத்து, ஆட்சி செய்பவனின் பெயர்.**

**வினா : நாம் எவருடைய உம்மத்?**

**விடை : நாம் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத் என்னும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவோம்.**

**வினா : ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதன் பொருள் என்ன?**

**விடை : அல்லாஹ்வின் புறத்திலிருந்து அடியார்களுக்கு மார்க்க சட்டத்திட்டங்களை எத்தி வைக்க வந்த தூதர் எனப் பொருள்படும்.**

**வினா : நம்முடைய நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எங்கு பிறந்தார்கள்?**

விடை : திருமக்காவில் பிறந்தார்கள்.

வினா : திருநபி (ஸல்) அவர்கள் எங்கே மரணித்தார்கள்?

விடை : திருமதினாவில் மரணித்தார்கள்.

வினா : அவர்களின் தலைமுறையினரின் பெயர்கள் யாவை?

விடை : முஹம்மது (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் அவர்களின் திருமகனாவார்கள், அப்துல்லாஹ் அவர்கள் அப்துல் முத்தலிபு அவர்களின் மகனாவார், அப்துல் முத்தலிபு அவர்கள் ஹாஷிம் அவர்களின் மகனாவார், ஹாஷிம் அவர்கள் அப்துல் மனாஃபின் மகனாவார்.

வினா : ஈமான் என்று எதற்குச் சொல்லப்படும்?

விடை : அல்லாஹுதஆலாவின் புறத்திலிருந்து முஹம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னென்ன கட்டளையெல்லாம் பெற்றுத் தந்தார்களோ, அவைகள் அனைத்தையும் உண்மை என்று நம்பி, நாவினால் மொழிந்து, செயல் மூலம் மெய்ப்பித்தலுக்கு ஈமான் எனப்படும்.

## கலிமதுத் தவ்ஹீத்
## (ஏகத்துவக் கலிமா விளக்கம்)

வினா : ஏகத்துவக் கலிமாவும் அதன் பொருளும் எவை?

விடை : 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி' என்பதே 'கலிமதுத்தவ்ஹீத்' எனப்படும்.

அதன் பொருள்:- வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவனுமில்லை. (எவையுமில்லை) முஹம்மதுர் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள்.

வினா : கலிமா ஷஹாதத் என்றால் என்ன? அதன் பொருள் என்ன?



விடை : 'அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ - இல்லல்லாஹு - வஹ்தஹு - லாஷரீக்கலஹுவ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு'

என்பது ஷஹாதத் கலிமாவாகும். அதன் பொருளாவது:- நான் (அறிந்து) சாட்சி சொல்லுகின்றேன். வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு எவனுமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எவனும், (எதுவும்) இணையாக இல்லை. மேலும், சாட்சி கூறுகின்றேன். உண்மையாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாராகவும், அவனின் திருத்தூதராகவும் இருக்கின்றார்கள்.

## ஹிகாயத்

இப்றாஹீமுல் வாஸிதீ என்பவர்கள் அரஃபாத் பெரு வெளியில் ஹஜ்ஜுடைய இரவன்று தம்முடைய கையில் ஏழு கற்களை எடுத்து வைத்துக் கொண்டு ''ஏ கற்களே! நீங்கள் எனக்கு சாட்சியாக இருங்கள்'' எனக் கூறி, ஷஹாதத் கலிமாவை ஏழுமுறை கூறி, அக்கற்களை ஹஜ்ஜின் 'ஜம்ராத்' களான எல்லைகளில் எறிந்தார்கள். அன்றிரவு அப்பெரியார் ஒரு கனவு காண்கின்றார்கள். அக்கனவில் அவர்கள், மறுமைநாள் வந்துவிட்டது போன்றும் அது சமயம் இவர்களைக் கேள்வி கணக்குகள் கேட்கப்பட்டு நரகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதும் நரகவாயில் அருகே சென்ற போது, ஒரு கல் அந்நரகத்தின் வாயிலை அடைத்துக் கொண்டு ஷஹாதத் கலிமா மொழிந்தது. பின்னர் வானவர்கள் இவர்களை வேறு ஒரு நரகவாயிலின் பால் அழைத்துச் சென்றபோது அவ்வாயிலையும் ஒரு கல் வந்து அடைத்துக் கொண்டு விட்டது. ஒவ்வொரு வாசலிலும் இவ்வாறே நிகழ்ந்ததும், வானவர்கள் வியப்புற்று இவர்களை அர்ஷின் அருகில் அழைத்துச் சென்று அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தினார்கள். அல்லாஹ் இவர்களை விளித்து, ''இப்றாஹீமுல் வாஸித்தே! நீர் கற்களை சாட்சிகளாக ஆக்கினீர், அவைகள் சாட்சியத்தை வீணாக்கவில்லை. அவ்வாறிருக்க, நான் உம்முடைய

நற்செயல்களை எவ்வாறு வீணாக்குவேன். ஒரு போதும் வீணாக்கமாட்டேன்'' எனக் கூறினான். அதன் பின்னர், மலக்குகளிடம், ''நீங்கள் இவரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.'' என்று ஆணையிட்டான். வானவர்கள் அவர்களை சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அது சமயம் சுவர்க்கத்தின் வாயில் திறக்கப்பட்டிருந்தது. அதனுள் நுழைவது போன்றும் அப் பெரியார் (கனவில்) கண்டார்கள்.-(துர்ரத்துன் நாஸிஹீன்)

வினா : ஈமானின் நிபந்தனைகள் (ஷர்த்துகள்) எத்தனை?

விடை : ஈமானின் நிபந்தனை ஏழாகும். அவையாவன :-

1. மறைவானவற்றின் மீது ஈமான் என்னும் நம்பிக்கைக் கொள்வதாகும். 'கைப்' - என்னும் மறைவானவைகள் எவையென்றால், 'மலக்கு'கள் என்னும் வானவர்கள், 'கியாமத் கேள்வி கணக்கு' மறுமையில், உலகில் மனிதர்கள் அவரவர் செய்த நன்மை தீமைகள் பற்றி விசாரிக்கப்படுதல். 'ஜன்னத்' என்னும் சுவர்க்கம். 'தோஸக்' என்னும் நரகம். 2. 'கைபுடைய இல்மு'- (இல்முல்கைப்) அதாவது, மறைவானவற்றைப் பற்றிய ஞானமும் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உரியதாகும். எனினும், சிலருக்கு (நபிமார்களுக்கு) 'வஹீ'யைக் கொண்டும், (வலிமார்களுக்கு) 'இல்ஹாம்' என்னும் ஞான உதிப்புகள் மூலமும் அல்லாஹ் தன்னுடைய கட்டளைகளை அவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கின்றான். 3. சுயமாக ஈமான் கொள்வது. (அதாவது எவருடைய வற்புறுத்தலுக்கும் இணங்காமல்) 4. அல்லாஹ்வால் ஹலால் ஆக்கப்பட்டவற்றை அப்படியே ஏற்றுச் செயல்படுவது. 5. அல்லாஹ்வால் ஹராம் ஆக்கப்பட்டவற்றை ஏன்? எதற்கு? என்று வினவாமல் தவிர்த்துக் கொள்வது. 6. அல்லாஹ்வின் வேதனைக்கு அஞ்சுவது. 7. அல்லாஹ்வின் அருட்கொடைகளை விரும்பி அவைகளின் மீது ஆசைக் கொள்வது.



## ஈமான் நிலைத்திருக்க!

வினா : ஈமான் (காயிமாக) நிலைத்திருப்பதற்குரிய நிபந்தனைகள் எத்தனை?

விடை : ஈமான் தரிபாடாக இருப்பதற்குரிய நிபந்தனைகள் மூன்று. 1. ஈமான் கிடைக்கப் பெற்றதைக் கொண்டு மகிழ்வது. 2 ஈமான் நம்மை விட்டும் நீங்கி விடுவதைக் கொண்டு அஞ்சுவது. 3. ஈமானை அழிக்கக் கூடிய செயல்களாகிய குப்ர், ஷிர்க்களை விட்டும் தம்மை காத்துக் கொள்வது.

வினா : 'ஷிர்க்' என்றால் என்ன?

விடை : அல்லாஹ்வின் அறிவில், ஆற்றல்களில் அவனது (சிபாத்) பண்புகளில் வேறொருவரை இணைப்பதாகும்.

வினா : அல்லாஹ்வின் அறிவில், ஆற்றலில், பண்புகளில் இணைவைப்பதென்றால் என்ன?

விடை : அல்லாஹ்வே யாவற்றையும் அறிந்தவன் என்னும் அவனது அறிவில் மனிதரையோ, மற்றவற்றையோ இணையாக்கி, இவர்களுக்கும் அல்லது இவை களுக்கும் எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் உண்டு என்று நம்புவதும், அதன்படி செயல்படுவதுமாகும்.

அல்லது, அல்லாஹ்வின் 'குத்ரத்' எனனும் பேராற்றலில் மனிதரையோ, வேறு பொருள்களையோ இணைத்து இவர்களுக்கும் அல்லது இவைகளுக்கும் அல்லாஹ்விற்குரிய ஆற்றல்கள் உள்ளன என்று நம்புவது. அதாவது ஒருவனுக்கு நல்லது செய்வதற்கும், தீயது செய்வதற்கும், நோயைக் கொடுப்பதற்கும், நலமாக்குவதற்கும் அல்லாஹ் அல்லாதவர்களும், அல்லாஹ் அல்லாதவைகளும் சக்தி பெற்றுள்ளனர் என்று நம்புவது. மேலும், அல்லாஹ்வின் சிபாத்களில் மற்றவரை இணை யாக்குவது என்பது படைத்தல், காத்தல், அழித்தல் போன்றவற்றில் மற்றவர்களையும் இணையாக்குவது.

வினா : 'குப்ர்' என்றால் என்ன?

விடை : அல்லாஹ்வும், அவன் திருத்தூதரும் கூறியுள்ளவற்றில் குற்றம் காண்பது, கேலி கிண்டல்கள் செய்வது. மார்க்கத்தில் உறுதி செய்யப்பட்டவற்றில் குற்றம் குறைகள் காண்பது.

வினா : ஈமான் கொள்வதால் ஏற்படும் நன்மையும் 'குப்ர்', 'ஷிர்க்' செய்வதால் விளைந்திடும் தீமைகள் என்ன?

விடை : ஈமானில் நிலைத்து இருந்து மரணம் அடைந்தவர் எல்லா நிலைகளிலும் இறைவனின் தண்டனைகளை விட்டும் நீங்கியிருப்பதுடன் சுவர்க்கத்தில் என்றைக்கும் நிலைத்திருப்பார். 'ஷிர்க்', 'குப்ர்'களில் இருந்து மரணமானவன் எக்காலமும் நரகத்தில் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருப்பான்.

வினா : சுவர்க்கம் என்றால் என்ன?

விடை : சுவர்க்கம் என்பது மகிழ்ச்சி நிறைந்த ஒரு புத்துலகமாகும். எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த இதயமும் உணர்ந்திராத மனிதனின் கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட, ஒளி நிறைந்த, தூய்மை நிறைந்த, எல்லாப் பொருள்களும் குறைவின்றி குவிந்து கிடக்கின்ற, உடலுக்கும் உயிருக்கும் இன்பமளிக்கின்ற யாவும் நிறைந்ததும், தோட்டங்களும், ஆறுகளும், பணிவிடைகள் செய்வதற்குப் பணியாட்களும், ஹுருல் ஈன்கள் என்னும் கண்ணழகிகளும், தங்குமிடங்களும் நிறைந்த தாகும். சுவர்க்கத்தில் மகிழ்ச்சிக்கும், சுகங்களுக்கும், அருட் கொடை களுக்கும் அளவேயில்லை. அந்த இடத்திலிருந்து எவரும் வெளியேறுகின்ற நிலையுமில்லை. அதில் நுழைந்தவர்கள் மீளவே மாட்டார்கள். வல்ல அல்லாஹ் தனது அன்பிற்குரிய நல்லடியார்களுக்கு என்றே சுவனத்தை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளான். மறுமை நாளில் இறையடியார்கள் அதில் நுழைவார்கள். அதன் உயர்ப் பதவிகள் (தரஜாக்கள்) பலவாகும்.



மனிதர்களின் நற்செயல்களுக்குத் தகுந்தாற் போல் அவர்களின் தரஜாக்களும் இருக்கும் என்றறிக!

வினா : நரகம் என்றால் என்ன?

விடை : நரகம் என்பது ஒரு பாழ் உலகம். அது இருள் நிறைந்ததும், வேதனைகள் நிறைந்ததுமான ஓர் இடம். உடலுக்கும், உயிருக்கும் வேதனைகள் அளித்திடத் தக்க எல்லாமே அதில் உள்ளன. அந்நரக எரி குண்டத்தில் பல்வேறு வேதனைகள் தந்திடும் வழி முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் நுழைந்தவர்களுக்கு சுகம் என்பதே கிடையாது. அந்த எரிகின்ற நரகத்தை அல்லாஹ் தன்னுடைய பகைவர்களாகிய காபிர்கள், முஷ்ரிகீன்கள் ஆகியோர் களுக்கென ஆயத்தப் படுத்தி வைத்துள்ளான். அப்பகைவர்கள் அதிலிருந்து என்றைக்குமே வெளியேற மாட்டார்கள். ஆனால், குற்றம் செய்துவிட்ட தனது அடியார்கள் அவரவர்களின் பாவச் செயல்களுக்குத் தக்கவாறு, அவன் நாடியவர்களை அதில் வேதனைப் பெற செய்த பின், அவர்களை சுவர்க்கத்தில் நுழையச் செய்வான்.

## ஈமான் முஜ்மல்!

வினா : ஈமான் முஜ்மல் என்றால் என்ன?

விடை : ஈமான் முஜ்மலின் பொருளாவது : நான் அல்லாஹ்வையும், அவனின் திருப்பெயர்களையும், மேலும் அவனுக்குரிய 'சிபாத்'கள் என்னும் பண்புகளையும், இன்னும் அவனது அனைத்துச் சட்டங்களையும், ஏவல் விலக்கல் களையும் (உண்மை என்று நம்பி) ஈமான் கொண்டேன் என்பதாகும்.

இதுவே 'ஈமான் முஜ்மல்' என்னும் பொதுப்படையாக ஈமான் கொள்வதாகும்.

## ஈமான் முபஸ்ஸல்

வினா : ஈமான் முபஸ்ஸல் என்றால் என்ன?

விடை : ஈமான் முபஸ்ஸலின் பொருளாவது : நான் அல்லாஹ்வையும், அவனது வானவர்கள் எனும் மலக்குகள்,

அவனின் வேதங்கள், அவனின் ரசூல்மார்கள், மறுமை நாள், நன்மை தீமைகள் யாவும் அவனின் விதி வசத்தாலேயே நிகழ்கின்றன என்றும், மேலும் இறப்பிற்குப் பின் எழுப்பி கேள்வி கணக்குகள் கேட்கப்படுவதும் உண்மையே என்றும் ஈமான் கொண்டேன்.

இதுவே 'ஈமான் முபஸ்ஸல்' அதாவது விரிவாக ஈமான் கொள்ளுதல் என்பதாகும்.

வினா : அல்லாஹ்வின் மீது எவ்வாறு ஈமான் கொள்வது?

விடை : அகிலங்கள் அனைத்தையும் படைத்து, காத்து, இரட்சிப்பவன் அல்லாஹ் ஒருவனேயாவான். அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும், இணைதுணை எவருமில்லை, எதுவுமில்லை. அவன் கதீம் என்னும் பூர்வீகமானவன். அவன் துவக்கமும் முடிவும் இல்லாதவன். அவன் தான் நாடியதைச் செய்திடும் ஆற்றல் பெற்றவன். அவனின் ஆட்சி அதிகாரங்களில் குறுக்கிட எவருக்கும் உரிமையில்லை. அவன் எவரிடத்தும் எத்தகைய தேவைகளும் அற்றவன். அனைத்துப் படைப்பினங்களும் அவனின் தேவைகளையே எதிர் பார்த்து நிற்கின்றன. அவன் அனைத்துக் குறைகளை விட்டும் நீங்கியவன்; முழுமையானவன்; கமால்கள் என்னும் முழுமைகள் அனைத்தும் அவனுக்கே உரியனவாகும். அவன் எல்லாவற்றின் மீதும் முழு ஆற்றல் பெற்றவன். மறை பொருள் அனைத்தையும் அறிந்தவன். அவன் அழிவற்றவன். துவக்கமும் முடிவும் அவனே. நேற்றும் இருந்தான்; இன்றும் இருக்கிறான்; நாளையும் இருப்பான். எவனும், எதுவும் அவனின் பார்வை யிலிருந்துத் தப்ப முடியாது. அவன் இருக்கின்றான் என்பதை ஒவ்வொரு பொருளும் அறிவித்துக் கொண்டேயிருக்கின்றன. அஃது எவ்வாறென்றால், கட்டடம் இருப்பது அதைக் கட்டியவன் ஒருவன் இருக்கிறான் என்று அறிவித்துக் கொண்டிருப்பதைப் போன்றும், எழுத்தை எழுதியவன் ஒருவன் இருக்கிறான் என்று எழுத்துக்கள் அறிவித்துக் கொண்டிருப்பது போலாகும்.

மேலும், அவனைத் தவிர உள்ள மற்ற அனைத்தும் அழிந்து



போகும். காரணம், அவைகளுக்குத் துவக்கமும், முடிவும் உள்ளன என்று ஈமான் கொள்வதாகும்.

வினா : மலக்குகள் மீது எவ்வாறு ஈமான் கொள்வது?

விடை : மலக்குகள் என்பவர்கள் அல்லாஹ்வின் அடியார்கள் ஆவார்கள். அவர்கள் 'அனாஸிர்' என்னும் பஞ்ச பூதங்களாகிய காற்று, நீர், நெருப்பு, சூரியன், மண் இவைகளின் ஆதாரங்கள் எவையும் இல்லாமல் ரூஹானிய்யா, நூரானிய்யா என்னும் ஒளியால் படைக்கப்பட்ட வர்களாவர். எத்தகைய பாவத்தையும் செய்யாதவர்கள். அவர்கள் தாம் விரும்பும் வடிவத்தில் வருவதற்குரிய ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் மீது அன்பு கொள்வது ஃபர்ளு ஆகும். அவர்களைப் பகைத்தவர் காபிராவார். அவர்கள் ஆணுமல்ல; பெண்ணுமல்ல. அவர்கள் எண்ணிக்கையற்றவர்கள். அவர்களுள் தலையாயவர்கள் நால்வர் ஆவர்.

1. ஜிப்ரயீல் (அலை) : இவர்கள் அல்லாஹ்வின் வேதங்களையும், கட்டளைகளையும் நபிமார்களிடத்தில் கொண்டு வந்து சேர்த்தவர்களாவர்.

2. மீக்காயீல் (அலை) : இவர்கள் மனிதர்களுக்கு உணவை இறைவன் புறத்திலிருந்து கொண்டு வந்து சேர்ப்பவர்கள். மேலும், இறைவனின் ஆணையை ஏற்று மழையை இறக்குபவர்கள் ஆவர்.

3. இஸ்ராபீல் (அலை) : இவர்கள் மறுமைநாளில் 'ஸூர்' என்னும் எக்காளம் ஊதுவதற்கென நியமிக்கப்பட்டவர்கள் ஆவர்.

4. இஸ்ராயீல் (அலை) : இவர்கள் உயிர்களைக் கைப்பற்றக் கூடியவர்கள். இவர்களில் சிலர் 'பைத்துல் மஃமூர்'' வானம், பூமி, கடல், மலை முதலியவற்றுள் இறை வணக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் சில மலக்குகள் மனிதர்களை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள் ளனர் என ஈமான் கொள்வது.

''ஒரு முஃமினான மனிதரின் ஐந்து காப்பாளர்களான மலக்குகள், அந்த முஃமினுடைய வலப்புறம் இருந்து கொண்டு, அவரின் நற்செயல்களை எழுதுகின்றார். ஒருவர் இடப்பக்கம் இருந்தவாறு அவரின் தீய செயல் களை எழுதுகின்றார். ஒருவர் அந்த முஃமினுடைய முன்பக்கம் இருந்தவாறு அவருக்கு நற்கருமங்களைக் கற்றுக் கொடுக்கின்றார் ; அவரின் பின்னால் இருந்தவாறு ஒரு வானவர் அந்த முஃமினுக்கு விளைய இருக்கும் தீங்குகளைத் தடுக்கின்றார். ஒருவர் முன்னெற்றி உரோமத்தின் பக்கம் இருந்தவாறு, அந்த முஃமினான அடியார் நபி (ஸல்) அவர்கள் மீது கூறிடும் ஸலவாத்துகளை எழுதுகின்றவராயும், அதை நபி அவர்களின் பால் கொண்டு சேர்ப்பவராயும் இருக்கின்றார்'' என ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

இப்னு ஆதில் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : ''ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி ஆதம் (அலை) அவர்களிடம் இருபது முறையும், நபி இத்ரீஸ் (அலை) அவர்களிடம் நான்கு முறையும், நபி நூஹ் (அலை) அவர்களிடம் ஐம்பது முறையும், நபி இப்றாஹீம் (அலை) அவர்களிடம் நாற்பது முறையும், நபி மூஸா (அலை) அவர்களிடம் நானூறு முறையும், நபி ஈசா (அலை) அவர்களிடம் பத்து முறையும், முஹம்மத் (ஸல்) அவர்களிடம் இருபத்து நான்காயிரம் முறையும் வருகை தந்தார்கள். அவர்கள் கண்மூடி திறப்பதற்குள்ளாக மண்ணிலிருந்து விண்ணுலகிற்குச் சென்று விடுவார்கள். அவர்கள் மிகவும் பலம் பொருந்தியர்களாக இருப்பார்கள்.''

- மஜாலிஸுஸ்ஸனிய்யா

இவையெல்லாம் ஒரு ரிவாயத்தின்படி உள்ளதாகும், என்றாலும் அவர்கள் எத்தனைமுறை இம் மண்ணுலகிற்கு வந்தார்கள் என அறுதியிட்டுக் கூறமுடியாது. வேறொரு அறிவிப்பின் படி மிகுதியாகவும் இறங்கியிருப்பார்கள் என அறிய வருகிறது. வல்லாஹு அஃலம் அல்லாஹ்வே அது பற்றி மிக அறிந்தவனாவான்.

வினா : வேதங்கள் மீது எவ்வாறு ஈமான் கொள்வது?



விடை : வேதங்களும் சுஹ்புகளாகிய அவனின் கட்டளைகளும் அல்லாஹ்வின் திரு வசனங்களாகும். அவற்றுள் நான்கு வேதங்கள் மிகவும் தலையாயவைகளாகும்.

1. 'தவ்ராத்', இது மூசா (அலை) அவர்களுக்கும், 2. 'ஜபூர்', இது தாவூத் (அலை) அவர்களுக்கும், 3. 'இன்ஜீல்', இது ஈசா (அலை) அவர்களுக்கும், 4. 'அல்குர்ஆன்', இது முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அல்லாஹ்வால் இறக்கியருளப் பட்டுள்ளன.

திருக்குர்ஆனின் சட்டங்கள் உலக முடிவு நாள் வரையும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாகும். திருக்குர்ஆன் அல்லாத மேற்கூறப்பட்ட மூன்று வேதங்களின் சட்டங்களும் நீக்கப்பட்டு விட்டன.

மேலும், திருக்குர்ஆன் என்பது அல்லாஹ்வின் திருவசனமாகும். எனவே, அது படைக்கப்பட்டது எனக்கூறுபவன் காபிராவான். எனினும், எழுத்தும், எழுதப் பயன்படுத்தப்பட்ட தாள்களும் படைக்கப் பட்டவைகள் எனக் கூறுபவன் காபிராவான். இவைகள் குர்ஆனை நாம் அறிந்துகொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் உண்டாக்கப் பட்டவைகளாகும். முஃதஸிலா பிரிவினர் குர்ஆன் படைக்கப்பட்டதே எனக் குதர்க்கம் செய்து, அவர்களின் கருத்தை ஏற்க மறுத்தவர்களை யெல்லாம் ஆட்சியாளரின் துணைகொண்டு பல்வேறு கொடுமைகளைச் செய்தனர். இந்நிலையில், இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்கள் குர்ஆன் படைக்கப்பட்டதல்ல, அது பூர்வீகமானது (கதீமானது). அது அல்லாஹ்வின் கலாம் எனக் குரல் எழுப்பிய காரணத்தினால் அம்மாமேதை சிறையிலடைக்கப்பட்டு கொடுமைகள் பல அனுபவித்ததுடன், கசை அடிகளுக்கும் ஆளாகி புண்பட்டு, குருதி சிந்தி இறப்பெய்தினார்கள்; அதன் மூலம் அல்லாஹ்விடத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றார்கள்.

வினா : நபிமார்கள் மீது எவ்வாறு ஈமான் கொள்வது?

விடை : நபி ஆதம் (அலை) அவர்கள் தொடுத்து, ஹலரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை உலகில் தோன்றிய நபிமார்கள், ரசூல்மார்கள் அனைவரும் நேரான உண்மையான மார்க்கத்தில் உள்ளவர்களேயாவர். அல்லாஹ் அவர்களை மனிதர்களுக்கு நேர்வழி காட்டிட, மனித இனத்திலேயே சிறந்தவர்களை நபியாகவும், ரசூலாகவும் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 'முஃஜிஸா' என்னும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலையும் தந்தான். எவர்கள் அந்த நபிமார்கள் காட்டிய நேர்வழியில் நடந்தனரோ அவர்களே சுவர்க்கவாதிகள் ஆவர். எவர்கள் அவர்களின் வழிமுறைகளை புறக்கணித்து, தம் மன இச்சைகளின் படி வாழ்ந்து மறைந்தனரோ அவர்கள் நரகவாதிகள் ஆவர். படைப்பினங்கள் அனைவரிலும் (அனைத்திலும்) மிகவும் உயர்ந்தவர்கள் ; சிறந்தவர்கள். மேலும், அனைத்து நபி மார்களும் உண்மையாளர்களே யாவர். பொய் பேசாதவர்கள். அல்லாஹ் எந்தக் கட்டளையை மக்களுக்கு எடுத்துரைக்க ஏவினானோ அந்தக் கட்டளைகளில் கூடுதல் குறைவுகள் செய்யாமல் அப்படியே எடுத்துரைப்பார்கள்.

மேலும், அவர்கள் நுபுவ்வத்திற்கு முன்னரும், பின்னரும் இரகசியத்திலும், பகிரங்கமாகவும் உள்ள அனைத்துப் பெரும் பாவங்கள், இழிவான சிறுபாவங்களை விட்டும் நீங்கி, தூய்மைப் பெற்றவர்கள்.

மேலும், நுபுவ்வத் எனப்படும் நபிப்பதவி முயற்சியால் கிடைக்கப் பெறுவதல்ல; அமல்களாலும் அது கிடைக்கப் பெறுவதல்ல. அஃது அல்லாஹ்வின் அருளால் அவன் விரும்புகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகும். எத்தகைய வலியும் ஒரு நபியின் தகுதியை, உயர்நிலையை எய்த முடியாது.

மேலும், ஒருவனுக்கு அடிமையாக இருப்பவரும், பெண்களும் நபியாக ஆகமுடியாது.

மேலும், நபி என்பவர்கள் மார்க்கத்தை மக்களுக்கு எற்றி வைப்பதற்கு ஏவப்படாதிருந்தாலும் சரி, மார்க்கத்தைக் கொண்டு எவர்களுக்கு வஹீ அருளப்பட்டதோ அவர்களே நபி ஆவார்கள்.



ரசூல் என்பவர்கள், மக்களுக்கு மார்க்கத்தை அறிவித்துக் கொடுத்து மக்களை நேர்வழியின் பால் ஹக்கின்பக்கம் அழைக்குமாறு-அல்லாஹ் அவர் களுக்குக் கட்டளையிட்டு வஹீ அறிவித்தானே, அத்தகைய வஹீயை பெற்றவர்களுக்கு ரசூல் எனக் கூறப்படும். மேலும், ரசூல்மார்களில் சிலர் புதிய மார்க்கத்தைக் கொண்டு வந்தவர்களும் ஆவர்.

ரசூல்மார்களையெல்லாம் நபிமார்கள் என்றும் கூறலாம். எனினும், நபிமார்களை ரசூல்மார்கள் எனக் கூறக் கூடாது. மேலும், நபிமார்கள் எவ்வளவு பேர்கள் என்று உறுதியாகக் கூற இயலாது. எனினும், ஒரு கூற்றின்படி நபிமார்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் என்றும், இன்னொரு சொல்லின்படி நான்கு இலட்சத்து இருபதினாயிரம் என்றும் கூறப்பட்டுள்ளது. இன்னும் சில கூற்றின்படி ரசூல்மார்கள் 313 பேர்கள் எனவும், முன்னூற்று பதினைந்து பேர்கள் என்றும், முன்னூற்று பதினான்கு பேர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. சரியான கூற்றின்படி நபிமார்கள் ரசூல்மார்களின் எண்ணிக்கை கணக்கற்றதாகும். ஆகவே, அல்லாஹ்வின் தூதர்களாகிய நபிமார்கள், ரசூல்மார்கள் எனப்படுவோர் கணக்கற்றவர்கள் ஆவர். ஆகவே, அல்லாஹ்வின் அடியார்களாகிய நபிமார்கள், ரசூல்மார்கள் அனைவரும் உண்மையாளர்கள் என ஈமான் கொள்வது கடமையாகும். அவர்களுள் இருபத்தைந்து பேர்களைப் பிரித்து அறிவது கடமையாகும்.

- (கால லஹுல் பாஜுரி)

அவர்களின் திருப்பெயர்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள் ளது. அவை வருமாறு :

1. ஆதம் (அலை) 2. இத்ரீஸ் (அலை) 3. நூஹ் (அலை) 4. ஹூத் (அலை) 5. ஸாலிஹ் (அலை) 6. இப்றாஹீம் (அலை) 7. லூத் (அலை) 8. இஸ்மாயீல் (அலை) 9. இஸ்ஹாக் (அலை)

10. யாஃகூப் (அலை) 11. யூசுப் (அலை) 12. அய்யூப் (அலை) 13. ஜகரிய்யா (அலை) 14. யஹ்யா (அலை) 15. ஷுஐப் (அலை) 16. மூசா (அலை) 17. ஹாரூன் (அலை) 18. அல்யஸஃ (அலை) 19. வல்கிஃப்லு (அலை) 20. தாவூத் (அலை) 21. சுலைமான் (அலை) 22. இல்யாஸ் (அலை) 23. யூனுஸ் (அலை) 24. ஈசா (அலை) 25. முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் ஆகியோராவர்.

அடுத்து, நபிமார்களில் 'ஊலுல் அZஜ்மி'கள் ஐவர் உள்ளனர். 1. முஹம்மது (ஸல்), 2. இப்ராஹீம் (அலை), 3. மூசா (அலை), 4. ஈசா (அலை). ஆகியோராவர். இன்னொரு கூற்றின்படி ஆதம் (அலை) அவர்களையும் சேர்த்து அறுவர் எனவும் கூறப்படுகிறது.

முஹம்மது (ஸல்) அவர்களே நபிமார்களில் இறுதியானவர்கள். அவர்களுக்குப்பின் நபி வரமாட்டார்கள். நபி (ஸல்) அவர்களே அனைத்து நபிமார்களுக்கும் தலைவராக இருக்கின்றார்கள். முத்திரையாகவும் திகழ்கின்றார்கள். அவர்கள் எல்லாப் படைப்பினங்களை விடவும், எல்லா நபிமார்களிலும் கண்ணியமும், சிறப்பும் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே, அவர்கள் நிரப்பமாக்கி வைத்த இஸ்லாம் மார்க்கம் ஒன்றே உலக முடிவு நாள் வரையும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தாகும். மேலும், ஈசா (அலை) அவர்கள் மறுமை நாள் நெருக்கத்தில் விண்ணிலிருந்து கீழ் இறங்கி, முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தையே பின்பற்றி நடப்பார்கள். எவனொருவன் தன்னை நபியென்று கூறுவானோ அவன் பொய்யனே யாவன்.

வினா : நாம் நபிமார்களை அறிவது எப்படி?

விடை : அவர்கள் நிகழ்த்திக் காட்டிய 'முஃஜிஸா'க் களின் மூலம் அறியலாம்.

வினா : 'முஃஜிஸா' என்றால் என்ன?

விடை : நபிமார்கள் வழக்கத்திற்கு மாற்றமாக எந்த ஒரு செயலை வெளிப்படுத்துவார்களோ அந்த ஓர் அற்புத



நிகழ்ச்சிக்கே 'முஃஜிஸா' எனக் கூறப்படும். உதாரணமாக : மரம், கல் போன்றவற்றை அவர்கள் வா! என அழைத்திடும்போது அவைகள் அவர்களிடம் வந்துவிடும். நமது நபி (ஸல்) அவர்கள் எத்தனையோ விந்தை நிகழ்ச்சிகளையெல்லாம் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். எனினும், திருக்குர்ஆனைப் போன்று சிறந்த உயர்ந்த ஒரு 'முஃஜிஸா' வேறு எவையும் இல்லை. நபி (ஸல்) அவர்களே ஒரு முறை திருக்குர்ஆனை விடச் சிறந்த ஒரு 'முஃஜிஸா' வேறொன்று மில்லை எனக் கூறியுள்ளார்கள். இந்த 'முஃஜிஸா'வே அனைத்திலும் மிக உயர்ந்ததும், சிறந்தது மாகும். இதுவே உலக முடிவு நாள் வரையும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாகும். மேலும், நபிமார்கள் நிகழ்த்திக் காட்டிய 'முஃஜிஸா'க்களை மறுப்பவன் காபிராவான்.

வினா : கியாமத் நாளின் மீது எவ்வாறு ஈமான் கொள்வது?

விடை : 'கியாமத்' வருவது உண்மையே! உலக முடிவு நாளின் போது இஸ்ராபீல் (அலை) அவர்கள் 'ஸூர்' என்னும் எக்காளம் ஊதுவார்கள். அது சமயம் அனைத்தும் அழிந்துவிடும். இரண்டாம் ஸூர் ஊதப்படும் போது மீண்டும் எல்லாம் உண்டாகிவிடும். அது எவ்வாறென்றால், மரண மடைந்த அனைவரும் கப்று என்னும் புதைக்குழியிலிருந்து உயிர்ப்பெற்று எழுவார்கள். அதுபொழுது வானம் நமக்கு மிக அருகில் வந்து விடும். மேலும், பூமி செம்புத் தரைப் போன்று ஆகிவிடும்; கொதிப்புடன் காணப்படும்.

அன்றைய ஒரு நாள் ஐம்பதினாயிரம் ஆண்டுகட்குச் சமம். அன்றைய நாளில் ஆயிரமாயிரம் கடிவாளங் களை நரகத்திற்கு மாட்டி அதனை வானவர்கள் இழுத்து வருவார்கள். அனைவரும் மனத் துடிப்புடனும், அச்சத்துடனும் காணப்படுவார்கள். அவரவர்களின் செயல்களுக்குத் தக்கவாறு வியர்வையில் மூழ்கிக் கொண்டிருப்பார்கள். ஆனால், நபிமார்களும், இன்னும் சில நல்லடியார்களும் 'அர்ஷி'ன் நிழலுக்குக் கீழ் இருப்பார்கள். அந்நிலையில் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ள முடியாதிருப்பார்கள். பசியும், பட்டினியும் அவர்களை

வாட்டிடும். தங்களுக்காக 'ஷபாஅத்' - பரிந்துரை - செய்யக் கூடியவர் எவரும் உள்ளனரா என்று தேடுவார்கள். எல்லா நபிமார்களும் 'நப்ஸீ, நப்ஸீ' எனக் கூறிக் கொண்டிருப்பார்கள். எவரும் எவருக்கும் பரிந்துரைச் செய்ய முன்வர மாட்டார்கள். எனினும், நமது நாயகம் (ஸல்) அவர்கள் மன்றாட்டம் செய்வார்கள். அது சமயம் அல்லாஹ் அவரவர்களின் கணக்குகளை வாங்கிடுமாறு வானவர்களுக்கு ஆணையிடுவான். செயல்களை நிறுத்திடும் மீஜான் என்னும் துலாக்கோல் வானத்திற்கு மேல் நிறுத்தப் படும். எவரின் நன்மையின் தட்டு கனக்கின்றதோ அவர் விடுதலைப் பெறுவார். எவனின் தீமையின் தட்டு கனக்கின்றதோ அவன் நரகம் புகுவான். மேலும், அமல்களின் கேள்வி கணக்குகள் முஃமின், காபிர்கள் அனைவர்க்கும் உண்டு. முஃமின்கள் மீது இறைவனின் அருட்கொடைகள் பொழியும், காபிர்கள் மீது இழிவு உண்டாகும்.

மேலும், அஃமால் நாமா என்னும் வினைகளின் பட்டோலை நல்லடியார்களுக்கு வலக்கையிலும், தீயவர்களுக்கு இடக்கையிலும் கொடுக்கப்படும். இன்னும் சிராத் என்னும் பாலம் மயிரைவிட மெல்லியதாகவும், வாளைவிட கூர்மையானதாகவும் நரகத்தின் மீது போடப்பட்டுள்ளது. அதன் மீது எல்லோரும் நடந்து செல்லுமாறு ஆணையிடப் படுவார்கள். நன்மைகள் செய்தோர் நடப்பார்கள். தீமைகள் செய்தோர் அதில் நடந்து செல்லும்போது கால்கள் அறுபட்டு நரகத்தில் வீழ்வார்கள்.

மேலும், 'ஹவ்லுல் கவ்ஸர்' என்னும் நீர் தடாகம் என்பதும் உண்மையேயாகும். அந்நீர்தடாகம் அல்லாஹ் வால் அண்ணல் நபி (ஸல்) அவர்கட்கு அளிக்கப்பட்ட ஓர் அருட்கொடை யாகும். அதன் நீரை அருந்தியவருக்கு என்றைக்கும் நீர்வேட்கை (தாகம்) ஏற்படாது.

முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்த ஒருவர் பாவத்தின் காரணமாக நரகில் விழும் நிலை பெறுவாராயின், அவருக்கு நபி (ஸல்) அவர்களின் பரிந்துரையால் பாவ மீட்சி கிடைக்கப் பெறுவார். மேலும், மற்ற நபி மார்களும், இறை



நல்லடியார்களும் இறைவனின் அனுமதி பெற்று அந்தந்த இடங்களில் பாவிகளுக்குப் பரிந்துரைச் செய்வார்கள். இறுதியாக முஃமின்கள் சுவர்க்கம் நுழைவார்கள் ; காபிர்கள் நிரந்தரமாக நரகில் கிடந்து உழல்வார்கள்.

வினா : கப்றில் வேதனைக்குரியவர்களும், மகிழ்ச்சிக்குரியவர்களும் எவர்கள்?

விடை : காஃபிர்களும், முஸ்லிம்களில் பாவிகளான சில அடியார்களும் கப்றில் வேதனை அளிக்கப் படுவார்கள். நல்லடியார்களான முஸ்லிம்கள் மண்ணறையாம் கப்றில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

வினா : கப்றில் கேட்கப்படும் கேள்விகள் யாவை?

விடை : உன்னுடைய 'ரப்பு' யார்? நபி யார்? உன் மார்க்கம் எது? என்று கேட்கப்படும்.

வினா : முஃமின்கள் இக்கேள்விகளுக்கு என்ன பதில் கூறுவார்கள்?

விடை : எனது இரட்சகன் அல்லாஹ் ஆவான். என்னுடைய நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். என்னுடைய மார்க்கம் தீனுல் இஸ்லாம் என்று கூறுவார்கள்.

வினா : காபிர்கள் இக்கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

விடை : இக்கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாமல் போய்விடுவதுடன் வேதனைகளை அனுபவிக்க நேரிடும்.

வினா : இஸ்லாத்தின் ஃபர்ளுகள் எத்தனை?

விடை : இஸ்லாத்தின் ஃபர்ளுகள் ஐந்து. 1. கலிமா, 2. தொழுகை, 3. ஜகாத், 4. நோன்பு, 5. ஹஜ்ஜு.

வினா : கலிமாவிற்கு எத்தனை ஃபர்ளுகள் உள்ளன?

விடை : கலிமாவிற்கு நான்கு ஃபர்ளுகள் உள்ளன : அவை யாதெனின், 1. 'இஸ்பாத்து Z தாதில்லாஹி' அல்லாஹ்வின்

உள்ளமைகளை உண்மை என்று ஒப்புக் கொள்வது. 2. 'இஸ்பாத்துசிபாத்தில்லாஹி' அல்லாஹ்வின் பண்புகளை உண்மை என்று ஏற்றுக்கொள்வது. 3. 'இஸ்பாத்து அப்ஆலில்லாஹி' அல்லாஹ்வின் செயல்முறைகள் உண்மை என்று ஒப்புக் கொள்வது. 4. 'இஸ்பாத்து ஸித் கிர்ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்தவைகள் அனைத்தும் உண்மையே என்று ஏற்றுக் கொள்வது.

– நிலாமுல் அகாயித்

வினா : ஒருவன் ஈமான் கொண்டபின் தனக்கு முழுமையான நஜாத் – ஈடேற்றமும், நரகத்தை விட்டும் பாதுகாப்புப் பெற்றிடவும் என்ன அமல்கள் செய்ய வேண்டும்?

விடை : ஷரீஅத்தினுடைய எல்லா சட்டங்களையும் ஏற்றுச் செயல்படுவதுடன், ஃபர்ளான கடமைகளைப் பேணிக் கடைபிடித்து, விடாது அவற்றை நிறைவேற்றி, பெரும் பாவங்களிலிருந்து விலகியிருக்கவும் வேண்டும்.

வினா : ஈமான் கொண்டபின் இரண்டாம் ஃபர்ளு என்ன?

விடை : ஐவேளைத் தொழுகைகளையும் முறையாக நிறைவேற்றுவதாகும்.

வினா : தொழுகை எவர் மீது கடமை? அதனை எக்காலம் வரை நிறைவேற்ற வேண்டும்?

விடை : பருவம் எய்தியது தொடுத்து மரணமாகின்ற வரையிலுமாகும். தொழுகையை எவரும் விடுவதற்கு அனுமதியில்லை. வல்ல அல்லாஹ் தனது திருமறையில் நபி (ஸல்) அவர்களை விளித்து, 'வஃபுது ரப்பக்க ஹத்தா யஃதியக்கல் எகீன்'' (நபியே!) உமக்கு எகீன் (மரணம்) எய்தும் வரையும் உமது இறைவனை (நீர்) வணங்குவீராக!' எனக் கூறுகின்றான்.

வினா : தொழாவிட்டால் என்ன நேரிடும்?



விடை : ஒரு வேளைத் தொழுகையை விட்டவன் பல்லாண்டுகள் நரகத்தில் வேதனை அனுபவிப்பான். எவனொருவன் தொழுகையைப் பேணித் தொழுது வருவானோ அவனுக்கு ஒளி ஏற்படும். அவனின் ஈமான் உறுதிபெறும். மேலும், மறுமையில் (நரகத்தை விட்டும்) விடுதலைப் பெறுவான்.

எவன் தொழுகையைப் பேணாமல் விட்டு விட்டானோ, அவனுக்கு ஒளியும் கிடைக்காது, ஈமானில் உறுதியும் இல்லாமல் போய்விடும். மறுமை நாளில் அவன், காரூன், பிர்அவ்ன், ஹாமான், உபை இப்னு கலப் போன்ற வம்பர் களுடன் இருப்பான் என ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

வினா : 'பர்ளு' என்று எதற்குச் சொல்லப்படும்?

விடை : 'பர்ளு' என்பது அல்லாஹ்வால் நம்மீது விதியாக்க பட்ட கட்டாயக் கடமைக்குச் சொல்லப்படும். மேலும், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு இமாம் களால் உறுதியுடன் ஒருமித்து ஒரு பொருளுடன் நிலைநிறுத்தப் பெற்றதற்கு ஃபர்ளு என்று கூறப்படும்.

வினா : பர்ளுகளை நிறைவேற்றினால் அவற்றிற்கு உரிய நன்மைகளும்; விட்டு விட்டால் விளைந்திடும் தீமைகளும் யாவை?

விடை : பர்ளுகளை நிறைவேற்றினால் நன்மையும், விட்டு விட்டால் தண்டனையும் கிடைக்கும். அவற்றை மறுத்தால் மறுத்தவன் காஃபிராவான்.

வினா : 'வாஜிப்' என்றால் என்ன?

விடை : அதுவும் நம்மீது அல்லாஹ்வால் விதியாக்கப்பட்ட கடமை தான். எனினும், பொருளில் (அர்த்தத்தில்) மாறுபட்டதாகும். அது ஃபர்ளுக்கு அடுத்த இடத்தில் உள்ளதாகும். அதை மறுப்பவன் 'ஃபாஸிக்' - பெரும்பாவியாவான். எனினும், காஃபிராகமாட்டான்.

வினா : 'சுன்னத்' என்றால் என்ன?

விடை : நபி (ஸல்) அவர்கள் தெளிவாக, திட்டவட்டமாக சொன்னதும், செய்து காட்டியதும், விரும்பிச் செய்ததுமான ஒன்றுக்கு சுன்னத் என்று சொல்லப்படும். அவைகள் முறையே சுன்னத், 'சுன்னத்துல்ஹுதா', அல்லது 'சுன்னத்து முஅக்கதா' எனப்படும். அவற்றைச் செய்வதன் மூலம் மிகுந்த நன்மைகளும், பெருமானாரின் அன்பும், அவர்களின் 'ஷபாஅத்' பரிந்துரையும் கிடைக்கும். சுன்னத்தை மறுப்பவன் 'பித்அத்' காரனாவான்.

வினா : 'ஒளு' என்றால் என்ன?

விடை : 'ஒளு' என்றால் முகம், இருகைகள் கழுவப்படுவதுடன், தலையை நனைத்த கையால் தடவுவதும், இரு கால்களை கரண்டை மொழி உட்பட கழுவுவதற்குச் சொல்லப்படும்.

வினா : ஒளுச்செய்யாவிடின் தொழுகை நிறைவேறுமா? நிறைவேறாதா?

விடை : ஒளுச்செய்யாவிட்டால் தொழுகை நிறைவேறாது.

வினா : ஒளுவில் எத்தனை ஃபர்ளுகள் உள்ளன?

விடை: நான்கு ஃபர்ளுகள் உள்ளன : 1. முகம் கழுவுதல், அது எவ்வாறென்றால், நெற்றி உரோமம் தொடுத்து, காதுகளின் சோணைவரையும் தாடையுட்படக் கழுவுவதாகும். 2. இருகைகளையும் முழங்கை மொழியுட்பட கழுவுதல். 3. தலையில் கால் பகுதி மஸஹு செய்வது. 4. இருகால்களையும் கணுக் கால்கள் உட்பட கழுவுதல் ஆக, இந்நான்கும் ஃபர்ளுகளாகும்.

வினா : ஒளுவின் சுன்னத்துகள் எத்தனை ?

விடை :ஒளுவின் சுன்னத்துகள் பதின்மூன்று : 1. நிய்யத்துச் செய்தல், 2. பிஸ்மில்லாஹ் சொல்லுதல், 3. இரு கைகளையும் மணிக்கட்டுவரைக் கழுவுதல், கழுவும் போது இரு கைவிரல்களையும் கோதுதல், 4. பற்களைத் துலக்குதல் 5. வாயைக் கொப்பளித்தல், 6. மூக்கிற்குள் நீர் செலுத்துதல்.



7. அடர்ந்த தாடியைக் கோதிக் கழுவுதல், 8. கால் விரல்களைக் கோதிக் கழுவுதல், 9. ஒவ்வொரு உறுப்பையும் மூன்று முறைக் கழுவுதல். 10. தலை முழுவதும் நனைந்த கையால் மஸஹு செய்தல், 11. இரு காதுகளையும் மஸஹு செய்தல், 12. ஒவ்வொரு பர்ளான உறுப்பையும் வரிசைப்படி (தர்தீபாக) செய்தல். 13. ஓர் உறுப்புக் காயுமுன் மறு உறுப்பைக் கழுவுதல், இவைகள் சுன்னத்துகளாகும்.

வினா : ஒளுவில் எந்தெந்த செயல்கள் மக்ரூஹ்களாகும்?

விடை : ஒளுச் செய்யும் போது உலகப் பேச்சுகளைப் பேசுவதும், நீரை முகத்தில் அடிப்பதும், மறைவிடத்தைப் பார்ப்பதன் மூலமும், கறைபடிந்த பாத்திரத்தில் நீர் எடுத்து ஒளுச் செய்வதும், பர்ளான உறுப்புக்களை மூன்று முறைகளுக்கு மேல் கழுவுவதாலும் ஒளுவில் மக்ரூஹ் ஏற்படும்.

வினா : ஒளுவின் முறித்தல்கள் யாவை?

விடை : 1. முன்துவாரம் பின்துவாரங்களிலிருந்து சிறுநீர், மலம், காற்று வெளியாவதைக் கொண்டு ஒளு முறிந்து விடும். 2. உடலில் உள்ள புண்ணிலிருந்து இரத்தம், சீழ் வெளியாகி வடிதல். 3. வாய்நிரம்ப வாந்தி எடுத்தல். 4. படுத்தவாறு, ஒன்றின்மீது சாய்ந்தவாறு தூங்குதல். 5. பைத்தியம் ஆகுதல். 6. போதை யாகுதல். 7. ஒரு பொருளை உண்பதால் போதை யாகுதல். 8. பருவம் எய்தியவர் தொழுகையில் வாய்விட்டுச் சிரித்தல். 9. ஆண் பெண் இருவருடைய மறைவிடங்களும் திரையின்றிச் சந்தித்தல். 10. இவற்றுள் ஏதாவது ஒரு செயல் நிகழ்ந்து விடுமாயின் ஒளு முறிந்துவிடும்.

வினா : முழுக்குக் கடமையானவன் திலாவத் சஜ்தா, தொழுகைப் போன்றவற்றை நிறைவேற்றினால் கூடுமா? கூடாதா?

விடை : ஜுனுபாளி, தூக்கத்தில் விந்து வெளியானவன், மாதவிலக்கு உள்ள பெண்கள், பிள்ளைப் பேற்றின் காரணமாக உதிர ஓட்டம் வரும் பெண்கள் ஆகியோர் குளிப்பது கடமையாக

இருக்கும் காரணத்தால் அவர்கள் தொழுவதும், 'திலாவத்' துடைய சஜ்தா செய்வதும் கூடாது; ஆகாது.

வினா : சுன்னத்தான குளிப்பை விடுவதன் காரணமாக தொழுகை நிறைவேறுமா? நிறைவேறாதா?

விடை : தொழுகை நிறைவேறிவிடும்.

வினா : சுன்னத்தான குளிப்புகள் யாவை?

விடை : ஜும்ஆ தொழுகைக்கு, இஹ்ராம் கட்டுவதற்கு, ஹஜ்ஜுக்கு, அரபா நாள், இருபெருநாட்களுக்குக் குளிப்பது சுன்னத்தாகும்.

வினா : முழுக்கின் ஃபர்ளுகள் எத்தனை?

விடை : முழுக்கின் ஃபர்ளுகள் மூன்றாகும் : 1. வாய்க்கு நீர் செலுத்தி கொப்பளித்தல். 2. மூக்கிற்கு நீர் செலுத்தி குடைந்து கழுவுதல். 3. உடல் முழுவதும் நனையுமாறு குளித்தல்.

வினா : முழுக்கின் சுன்னத்துக்கள் எத்தனை ?

விடை : முழுக்கின் சுன்னத்துகள் ஐந்து : 1. முழுக்கை நீக்குவதற்குக் குளிக்கின்றேன் என நிய்யத் செய்வது. 2. மணிக்கட்டுகள் வரையும் இரு கைகளைக் கழுவுதல். 3. அசுத்தம்பட்ட இடங்களைக் கழுவுதல். 4. ஒளுச் செய்தல். 5. உடல் முழுவதையும் நன்றாகத் தேய்ப்பதுடன் மூன்று முறை வலப்பக்கமும், இடப்பக்கமும் தண்ணீர் ஊற்றுதல்.

வினா : 'ஒளு' விற்கும், முழுக்கிற்கும் தண்ணீர் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?

விடை : இரண்டிற்கும் பகரமாக 'தயம்மும்' செய்ய வேண்டும்.

வினா : 'தயம்மும்' செய்ய விதியானவன் யார்?

விடை : தானிருக்கும் இடத்திற்கும் தண்ணீர் இருக்கும் இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஒரு மைல் அளவுக்கு



இருந்தால், தண்ணீரைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு நோயுற்றிருந்தால், கிணற்றில் நீர் எடுக்கப் பாத்திரம் இல்லாதிருந்தால், பாத்திரமோ, தண்ணீரோ காசு கொடுத்து வாங்குவதற்கு வசதியற்றவனா யிருந்தால், விலைக்குத் தண்ணீர் வாங்கிட எண்ணியும் மிகுதியான விலைக்குத் தண்ணீர் விற்கப் பட்டால், கடுங்குளிர் காலமாக இருந்து தண்ணீரைப் பயன்படுத்தினால் நோய் அதிகமாகிவிடும் என்று அஞ்சினால் இத்தகைய நிலையிலுள்ளவன் தண்ணீருக்குப் பகரமாகத் 'தயம்மும்' செய்து கொள்வது ஆகுமானதாகும்.

வினா : தண்ணீர் இருந்தும், உடல்நலம் பெற்றிருந்தும் கூட, தயம்மும் செய்து கொள்ள விதியானவன் யார்?

விடை : ஜனாஸா தொழுகை, இருபெருநாள் தொழுகைகள் இவைகளுக்கு ஒளுச் செய்து கொண்டு போவதாக இருந்தால் அத்தொழுகைகள் தவறிவிடும் எனும் அச்சம் கொண்டவ னுக்குத் 'தயம்மும்' செய்து கொள்வது கூடும்.

வினா : தண்ணீர் இருந்தும், உடல் நலம் பெற்றிருந்தும் ஜும்ஆ தொழுகைத் தவறிவிடும் என்று அச்சம் கொண்டவன் 'தயம்மும்' செய்தால் கூடுமா? கூடாதா?

விடை : கூடாது. காரணம், ஜும்ஆ தவறினால் அதற்குப் பதிலாக லுஹர் தொழுது கொள்ளலாம். நேரம் தவறிவிட்டால் களா தொழுது கொள்ளலாம். எனவே 'தயம்மும்' கூடாது.

வினா : ஒருவன் மீது குளிப்புக் கடமையாக இருக்கும்போது தொழுகை நேரமும் வந்து விட்டது. இந்நிலையில் அவன் 'தயம்மும்' செய்யத் தகுதியுள்ளவனாக (விதியுள்ளவனாக)வும் இருக்கிறான். அத்தகையவன் ஒரு 'தயம்மும்' செய்வதா? இரு 'தயம்மும்'கள் செய்வதா?

விடை : அவன் முழுக்கிற்கும், ஒளுவிற்கும் பதிலாகத் தாம் 'தயம்மும்' செய்வதாக நிய்யத்துச் செய்து ஒரு 'தயம்மும்' செய்தால் போதுமானது. குளிப்புக்கு என்று மட்டும் நிய்யத்துச் செய்திருந்தால், ஒளுவிற்காகவும் இன்னொரு 'தயம்மும்' செய்து

கொள்ள வேண்டும்.

வினா : 'தயம்மும்' எதில் எதில் செய்ய வேண்டும்?

விடை : துப்பரவான பூமி, மண், மணல், கல், காவி சுன்னம் பிடித்த சுவர், சுருமா, அதாவது மை கல் போன்றவற்றுள் தயம்மும் செய்தல் கூடும்.

வினா : ஒருவன் 'தயம்மும்' செய்யமுடியாத இடத்தில் இருக்கின்றான். அங்குத் தண்ணீரும் இல்லை; 'தயம்மும்' செய்ய ஆகுமானத் துப்பரவான இடமும் இன்றி, அசுத்தமான இடத்தில் இருந்து கொண்டிருக்கும் நிலையில், தொழுகையின் நேரம் முடுகிவிட்டால், அவன் எவ்வாறு 'தயம்மும்' செய்வது?

விடை : பூமி அல்லது சுவர் முதலியவற்றை ஓர் ஆயுதத்தால் சுரண்டி எடுத்து, அதிலிருந்து துப்பரவான மண்ணை 'தயம்ம'முக்கு ஏற்றாற்போல் எடுத்து, அதில் தயம்மும் செய்ய வேண்டும்.

வினா : நிலத்தை, சுவர்களைச் சுரண்டுவதற்கு எத்தகைய கருவியும் பெற்றிராதவனும், சுரண்டுவதற்கு சக்தி பெற்றிராதவனும், அல்லது, பூமி, சுவர் முதலியவை சுரண்டமுடியாத அளவிற்கு மிகவும் உறுதியாக இருந்திடும்போது எவ்வாறு 'தயம்மும்' செய்வது? எப்படித் தொழுவது?

விடை : இக் கூற்றில் கருத்து வேறுபாடு நிகழ்கிறது. அதாவது, இமாம் ஹலரத் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். "தொழ வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டால் ஒருவன் தண்ணீரையோ, அல்லது 'தயம்மும்' செய்வதற்கான இடத்தையோ அவன் தேட வேண்டும்" என்கின்றார்கள்.

இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்கள், "தொழுகைக்குரிய நேரம் வந்ததும் தொழுகையை (இஷாரா) சைகையின் மூலம் நிறைவேற்றி விட்டுப் பின்னர் விடுதலைப் பெற்றதும் மீண்டும் திரும்பத் தொழுது கொள்ள வேண்டும்."

வினா : 'தயம்மும்' செய்வதற்கு உரியவன் தண்ணீர் அருகில் இருப்பதாக சந்தேகம் வந்தால் என்ன செய்ய வேண்டும்?



விடை : அவன் முன்னூறு அடி தூரத்திற்குக் குறையாமலும், நானூறு அடி தூரத்துக்கு அதிகப்படாமலும் தண்ணீரைத் தேட முயல வேண்டும். அது அவன் மீது வாஜி பாகும்.

வினா : ஒரு நேரத் தொழுகைக்கு ஒருவன் தயம்மும் செய்தான். அதே 'தயம்மு'மில் ஃபர்ளு, வாஜிபு, சுன்னத்து, நபில் முதலியவற்றை நிறைவேற்றிக் கொள்ளலாமா?

விடை : தயம்மும் முறியாதவரை அவன் விரும்பிய தொழுகைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வினா : தயம்மும் எச்செயலால் முறியும்?

விடை : ஒளுவை முறிக்கும் அனைத்துச் செயல்களும் தயம்மத்தை முறித்துவிடும். தண்ணீர் கிடைத்து விட்டாலும் முறிந்து விடும்.

வினா : ஒருவன் நோயாளியாக இருந்தான்; பின்னர் நலம் பெற்றான். ஒருவன் ஜுனுபாளியாக இருந்தான். தண்ணீரைப் பெற்றுக் கொண்டான். இவர்கள் தயம்மும் செய்தால் கூடுமா? கூடாதா?

விடை : நோயிலிருந்து குணமானவன் தண்ணீரால் ஒளு செய்ய வேண்டும். ஜுனுபாளி முழுக்கை நீக்கத் தயம்மும் செய்யக் கூடாது. குளிக்கவேண்டும்.

வினா : தயம்மத்தின் ஃபர்ளுகள் எத்தனை?

விடை : அதன் ஃபர்ளுகள் மூன்றாகும். 1. நிய்யத்துச் செய்தல். அதாவது நான் ஒளுவை நிறைவேற்ற தயம்மும் செய்கின்றேன். அல்லது முழுக்கை நீக்கத் தயம்மும் செய்கின்றேன் என்பதாகும். ஒளுவிற்காக மட்டுமென்றால் ஒளுவிற்காக என்றும், குளிப்பிற்காக என்றால் குளிப்பையும் நிய்யத்துச் செய்து கொள்ள வேண்டும். இரண்டிற்காகவும் என்றால், 'ஹதஸ் என்னும் தொடக்கு நீங்கவும், துப்புரவிற்காகவும் என்றும் நிய்யத் செய்து கொள்ள வேண்டும்

2) 'தயம்மும்' செய்வதற்குத் தகுதியான சுத்தமான இடத்தில் இருகைகளையும் அடித்து, அக்கைகளால் முகம் முழுவதும் தடவி, நெற்றி உரோமம் தொடுத்து, தாடை வரையும் தடவ வேண்டும்.

3) மீண்டும் முன்போலவே கைகளை அடித்து விரல்களின் நுனிமுதல் வலப்புறம் தொடுத்து இடப்புறம் வரையும், இடக்கைத் தொடுத்து வலக்கை வரையும், முழங்கை உட்பட அடைய வளைந்து முழுமையாகத் தடவுதல்.

வினா : 'ஹைளு' என்றால் என்ன?

விடை : ஒன்பது வயதிற்குக் குறையாத பெண் பிள்ளை, பருவம் எய்தியவள் அவளின் உதிரம் இறங்கிடும் இடத்திலிருந்து வெளியாகி ஓடும் உதிரத்திற்கு 'ஹைளு' என்று சொல்லப்படும்.

வினா : ஒன்பது வயதிற்குக் குறைவான ஏழு, அல்லது எட்டு வயது சிறுமிக்கு உதிரம் வந்தால் அது ஹைளாகுமா?

விடை : அது ஹைளு அல்ல; நோயின் காரணமாக வெளிப்படும் உதிரமாகும்.

வினா : தங்கடத்துடன் ஹைளு இறங்கக் கண்டால் அது ஹைளு ஆகுமா?

விடை : மிகவும் தங்கடத்துடன் ஒருத்திக்கு உதிரம் காணப்பெற்றால் அதை நோய் எனச் சொல்லப்படும்.

வினா : ஒன்பது வயதிலிருந்து எத்தனை வயது வரை வெளிப்படும் உதிரத்திற்கு ஹைளு எனச் சொல்லப்படும்?

விடை : ஒன்பது வயது முதல் ஐம்பத்தைந்து அல்லது அறுபது வயது வரை வெளிப்படும் இரத்த ஓட்டத்திற்கு ஹைளு எனச் சொல்லப்படும்.

வினா : அறுபது வயதிற்கு மேல்பட்டவளுக்கு உதிரம் கொட்டினால் அது ஹைளு ஆகுமா?



விடை : அதை நோய் என்று கூறப்படும். ஆனால், அறுபது வயதை அடைந்தவளின் கருப்பையிலிருந்து மிகவும் சிவந்த நிறத்தில் இரத்தம் வெளிப்பட்டால் அதுவும் 'ஹைளு' தான்.

வினா : ஹைளு எத்தனை நிறங்களில் வெளியாகும்?

விடை : அஃது ஆறு நிறங்களாகும். சிவப்பு, கறுப்பு, மஞ்சள், கலங்கல், பச்சை, மண்ணிறம்.

வினா : ஹைளில் மிகுந்தது எத்தனை நாட்கள்? குறைந்தது எத்தனை நாட்கள்?

விடை : ஹைளில் குறைந்தது மூன்று பகல், மூன்று இரவுகளாகும். கூடியது பத்து நாட்களாகும்.

வினா : ஒரு ஹைளில் முதலில் உதிரம் கண்டு இடையில் துப்புரவாகி, மீண்டும் இரத்தம் கண்டாள் என்றால், அதாவது, ஒருத்தி தனக்கு ஒரு நாள் மட்டுமே ஹைளுவரும் வழக்கம் உடையவள், முதல் இரண்டு நாட்கள் உதிரம் வந்தபின், இடையில் துப்புரவு ஆனாள். பின்னர் இரண்டு நாட்கள் உதிரம் வரக்கண்டாள். இந்நிலையில் இடையில் இரண்டு நாட்கள் துப்புரவு பெற்று அவ்விரண்டு நாட்களும் ஹைளில் இருந்து சுத்தமானதாக ஆகுமா?

விடை : உதிரம் வராத அவ்விரு நாட்களும், இடையில் சுத்தமான அவ்விரு நாட்களும் துப்புரவு ஆன நாட்களாக ஏற்கப்படமாட்டாது; அந்நாட்களும் ஹைளுடைய நாட்களாகவே கொள்ளப்படும்.

வினா : மாதவிடாய் உள்ளவள் எந்தெந்தச் செயல்களை விலக்கிக் கொள்ள வேண்டும்?

விடை : முழுக்குக் கடமையான ஜுனுபாளிக்கு விலக்கப் பட்ட ஐந்து காரியங்களுடன், மேலும், இரண்டு காரியங்கள் தடைச் செய்யப்பட்டுள்ளன. 1. தொழுவது, 2. பள்ளிவாசலில் நுழைவது, 3. கஃபாவை தவாஃப் செய்வது, 4. குர்ஆன் ஓதுதல், 5. குர்ஆனைத் தொடுதல் இவ்வைந்து செயல்களுடன் நோன்பு

நோற்றல், முழங்கால்களுக்கு மேலும், கொப்புமுக்குக் கீழும் ஆண் பெண் உடலுறவு கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வினா : ஹைளுகாரிகள் துப்புரவு ஆன பின்னர் தொழுகை, நோன்புகளை களா செய்ய வேண்டுமா?

விடை : விடுபட்ட நோன்புகளைக் களா செய்யவேண்டும்; தொழுகைகளைக் களா செய்ய வேண்டியதில்லை.

வினா : ஹைளில் இருந்து சுத்தமான பெண்கள் விடுபட்ட நோன்புகளை மட்டும் களா செய்ய வேண்டுமென்றும், தொழுகைகளை களா செய்ய வேண்டிய அவசிய மில்லை எனக் கூறப்படுவதன் காரணமென்ன?

விடை : ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களும், அன்னை ஹவ்வாவும் இப்பூவுலகில் வாழ்க்கை நடத்தி வரும்போது, ஒருமுறை அன்னையார் தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். அதுசமயம் அவர்களுக்கு உதிர ஓட்டம் ஏற்பட்டது. அவர்களுக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாததால், அவர்கள் பாவா ஆதம் (அலை) அவர்களிடம் அது பற்றி வினவினார்கள். அதுபற்றி அவர்களும் அறியாத நிலையில் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் முறையிட்டார்கள்; ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அது குறித்து அல்லாஹ்விடம் கூறினார்கள். அதற்கு, அல்லாஹ் ''இது ஒரு கெட்ட நீர். இது உடலில் இருந்து வெளியாகும் வரை தொழக்கூடாது. அது நின்ற பின் விடுபட்ட தொழுகைகளை மீண்டும் தொழ வேண்டியதில்லை'' என்று கூறினான். இச்செய்தியை ஜிப்ரயீல் (அலை), ஆதம் (அலை) அவர்களுக்கு அறிவித்தார்கள். ஆதம் (அலை) தம்முடைய மனைவியிடம் ''உதிரம் ஓடும் காலங்களில் தொழ வேண்டியதில்லை; துப்புரவு ஆனபின் விடுபட்டத் தொழுகைகளையும் மீட்ட வேண்டியதில்லை. இது இறைவனின் கட்டளை'' என்றார்கள்.

சில நாட்களுக்குப் பின்னர் ஹவ்வா அன்னையார் தமக்கு மீண்டும் உதிரம் வருவதைக் கண்டார்கள். அது சமயம் நோன்பு காலமாக இருந்தது. இதுபற்றி அன்னையார் அவர்கள் தந்தை



ஆதம் (அலை) அவர்களிடம் கூறினார்கள். ஆதம் (அலை) அவர்கள் நோன்பு நோற்கவேண்டாம் என்று கூறிவிட்டார்கள். பின்னர், அன்னையார் துப்பரவு ஆனதும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் ஆணையை அறிவித்தார்கள். அதாவது ''விடுபட்ட நோன்புகளை களா செய்யவேண்டும்'' என்பதாக! அதனைக்கேட்ட ஆதம் (அலை) அவர்கள் ''அல்லாஹ்வே! நீ தொழுகைகளை களா செய்யுமாறு ஆணையிடாதிருக்க நோன்புகளை மட்டும் களா செய்யுமாறு ஏன் கூறினாய்?'' என்று வினவினார்கள்.

அதற்கு அல்லாஹ். ''ஓ ஆதமே! நீர் உமது மனைவிக்கு முதலில் உதிரம் கண்டபோது அதுபற்றி என்னிடம் கேட்டீர், நான் பதில் அளித்தேன். மறுமுறை உதிரம் கண்டபோது என்னிடம் அதுபற்றிக் கேட்காமல் நீரே சட்டம் சொல்லி விட்டீர். அதனால்தான் நோன்பின்போது உதிரம் வந்தால் நோன்பை நோற்காமல் விட்டுவிட்டு, துப்பரவு ஆனபின் களாச் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டேன்'' எனறு விடையளித்தான்.

வினா : ஒரு பெண் தொழுகையின் முதல் நேரத்தில் துப்பரவாக இருந்தாள். கடைசி நேரத்தில் அவள் உதிரம் கண்டாளாயின் அவளின் இடைப்பட்ட தொழுகைகளை அவள் அதா செய்ய வேண்டுமா?

விடா : அவள் மீது அந்நேரத்தில் தொழுகைகள் கடனாகாது.

வினா : ஒரு பெண் தொழுகையின் முதல் நேரத்தில் ஹைளுகாரியாக இருந்தாள். கடைசி நேரத்தில் துப்பரவு ஆனாள் என்றால் அந்நேரத்தின் தொழுகை அவள்மீது கடமையாகுமா?

விடை : ஹைளைவிட்டும் கடைசி நேரத்தில் துப்புரவு ஆனாளாயின் அந்நேரத்தின் தொழுகை அவள் மீது கடமையாகும்.

வினா : ஒரு பெண் நோன்பு நோற்றநிலையில் பகலின் கடைசி நேரத்தில் உதிரம் கண்டாளாயின் அவளுக்கு அந்த நோன்பு 'அதா'வாக ஆகுமா?

விடை : அந்நோன்பு 'அதா'வாகாது; முறிந்து விடும்.

வினா : ஒரு பெண் நோன்பு நோற்ற நிலையில் கடைசி நேரத்தில் உதிரம் கண்டாள். பகல் முழுவதும் கழிந்து விட்டது, இன்னும் சிறிதுநேரமே இருக்கின்றது என்பதாக எண்ணி அவள் நோன்பை முறிக்காது இருந்தாளாயின் அந்நோன்பு நிறைவேறுமா? கூடாதா?

விடை : அந்நோன்பு நிறைவேறமாட்டாது, முறிந்து விடும். அதை மீண்டும் களாவாக நோற்க வேண்டும்.

வினா : ஒரு பெண் ஹைளைவிட்டும் நீங்கித் துப்பரவானது தனக்கு நன்கு தெரிந்த நிலையில் அவள் உடனே குளித்து, அம்மாதம் ரமலான் மாதமாக இருப்பின் மீதியுள்ள நோன்புகளை நோற்காமலும் தொழுகைகளை தொழாமலும் இருப்பாளாயின் அது தவறா? அல்லவா?

விடை : துப்புரவானது தனக்கு நிச்சயமாக தெரிந்த பின்னரும், குளிக்காமலும், ஃபர்ளான நோன்புகளை நோற்காமலும், தொழாமலும் பிற்படுத்துவது ஹராமாகும், அவள் பாவியாவாள்.

வினா : மாதவிடாயாக உள்ள மனைவியுடன் உடல் உறவு கொள்ளலாமா?

விடை : மாதவிடாயாக இருக்கும் மனைவியுடன் உடலுறவு கொள்வது ஹராமாகும்.

வினா : மாதவிலக்கு உள்ளவள் குர்ஆன் ஷரீபை எடுக்கலாமா?

விடை : மாதவிலக்கு உள்ளவள் குர்ஆனைத் தொடுவதும் எடுப்பதும் கூடாது.

வினா : ஹைளுகாரப் பெண்கள் உறையிடப்பட்ட குர்ஆனை எடுப்பது கூடுமா?

விடை : உறையிடப்பட்ட குர்ஆனை மாதவிலக்கு பெண்கள் எடுப்பது மக்ரூஹ் ஆகும்.



வினா : மாதவிலக்குடைய பெண்கள் குறைந்த நாட்களாகிய மூன்று நாட்கள், ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது இந்நாட்களில் தாம் துப்புரவு ஆனதாகக் கண்டு, குளித்துவிட்டால் அவள் துப்புரவு ஆகிவிடுவாளா?

விடை : ஹைளில் குறைந்தது மூன்று நாட்கள் ஆனபின்னர் அவள் துப்புரவு கண்டால் அது போது மானதாகும்.

வினா : ஹமல்காரி (கர்ப்பவதி) உதிரம் கண்டால் அது என்ன?

விடை : ஹமல்காரி உதிரம் கண்டால் அது நோயாகும்.

## நிபாஸ் என்றால் என்ன?

வினா : நிபாஸ் என்று எதற்குச் சொல்லப்படும்?

விடை : பிள்ளைப் பிறந்த பின்னர் ஒரு பெண்ணிற்கு வெளிப்படும் உதிர ஓட்டத்திற்கு 'நிபாஸ்' என்று சொல்லப்படும்.

வினா : ஒரு பெண் ஒரு சூலில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள் ; முதல் குழந்தைப் பிறந்தவுடனே நிபாஸ் வாஜிபாகின்றதா? இரண்டாம் குழந்தையைப் பெற்ற பின் நிபாஸ் வாஜிபாகின்றதா?

விடை : முதல் குழந்தைப் பிறந்ததுமே நிபாஸ் வாஜிபாகி விடுகின்றது.

வினா : நிபாஸ் நின்றிடும் எல்லைகள் (நாட்கள்) எத்தனை?

விடை : நிபாஸுக்குக் குறைந்த நாட்கள் கணக்கில்லை; மிகுந்த நாட்கள் நாற்பது நாட்களாகும்.

வினா : நாற்பது நாட்களை விடவும் மிகுதியாக உதிரம் வெளிவந்தால் அது நிபாஸாகுமா?

விடை : அது நிபாஸ் அல்ல; அது இஸ்த்திஹாலா என்னும் நோயாகும்.

வினா : நிபாஸ்காரிகள் எந்தெந்தச் செயல்களைத் தவிர்த்து கொள்ள வேண்டும்?

விடை : ஹைளுகாரிகளுக்கு எவையெல்லாம் விலக்கப் பட்டுள்ளனவோ அவை அனைத்தும் நிபாஸ்காரி களுக்கும் தடுக்கப்பட்டுள்ளன.

வினா : குழந்தைப் பெற்ற பத்து நாட்களுக்கு மேலும், நாற்பது நாட்களுக்கு இடைப்பட்டும் அதாவது, 15, 20 30, 35, 38, 39 இந்நாட்களில் உதிரம் நின்று விட்டால் அப்பெண் குளித்துத் துப்பரவாகித் தொழுகையை மேற்கொள்வதா? அல்லது நாற்பது நாட்கள் முழுமையாவதை எதிர்பார்ப்பதா?

விடை : நிபாஸ் வரும் பெண்கள் பத்து நாட்களில் தங்களுக்கு நிபாஸ் நின்று விட்டதை அறிந்தவுடன் குளித்துத் துப்பரவாகி அந்நேரத்து தொழுகையை நிறைவேற்ற வேண்டும்; நோன்பு நாளாக இருப்பின் நோன்பும் நோற்க வேண்டும்.

வினா : ஒரு பெண் தனக்கு வழக்கமாக ஏழு நாளில் ஹைளு நின்று விடும் நிலைபெற்றவளாயிருந்து, அவளுக்கு வழக்கத்திற்கு மாற்றமாகப் பன்னிரெண்டு நாட்களும்; நிபாஸ்காரி ஒருத்தித் தனக்கு வழக்கமாக முப்பதாம் நாளில் துப்பரவாகிவிடும் நிலைபெற்றவளாயிருந்து, வழக்கத்திற்கு மாற்றமாக ஐம்பது நாட்களுக்கு நிபாஸ் வரக்கண்டால், வழக்கத்திற்கு மாற்றமான ஐந்து நாட்களுக்குரிய ஹைள் கணக்கும், வழக்கத்துக்கு மாற்றமான இருபது நாட்களுக்குரிய நிபாஸ் கணக்கும், இவை இரண்டும் ஹைளு, நிபாஸ் களுடைய கணக்காகுமா?

விடை : தனக்கு வழக்கமாக ஹைள் வரும் நாட்களை அனுபவமாகப் பெற்ற ஹைளுகாரி, வழக்கத்திற்கு மாற்றமாக ஐந்து நாட்கள் மிகுதியாக வருவதைக் காண்பவளும்,

அதுபோன்று, நிபாஸில் வழக்கத்திற்கு அதிகமாக இருபது நாட்கள் கூடுதலாக நிபாஸ்வரும் நிபாஸ் காரிகள் கூடுதலாக வரும் ஹைளு, நிபாஸ்களை நோய் என்று கருதி கொள்ள



வேண்டும். குளித்துவிட்டுத் தொழுகை, நோன்புகளை கடைப்பிடிக்க வேண்டும்.

வினா : நோயின் காரணமாக எப்பொழுதும் உதிரம் வரக்கண்டவள் தொழலாமா? நோன்பு நோற்கலாமா? கணவனுடன் உடலுறவு கொள்ளலாமா?

விடை : ஹைளு, நிபாஸ்களின் குறிப்பிட்ட நாட்களை விடவும் நோயின் காரணமாக வெளிப்படும் உதிர ஓட்டம் உள்ள பெண்கள் தொழவும், நோன்பு நோற்கவும், உடலுறவு கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வினா : நோயின் காரணமாக உதிர ஓட்டம் உள்ள பெண்களுக்கும், புண்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருப்பவர்களுக்கும், மேலும், சிறுநீர் சொட்டு சொட்டாக இறங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும், மூக்கில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருப்பவர் கட்கும், சீழ் வடிந்து கொண்டிருப் பவர்கட்கும் இன்னும் இவை போன்ற நோய்க்காரர்களுக்கும் உரிய சட்டம் என்ன? இவர்கள் எவ்வாறு தொழுவது?

விடை : இத்தகைய நோயாளிகள் ஒரு வேளைக்குச் செய்த ஒளுவுடன் அந்நேரத்தின் ஃபர்ளு, சுன்னத்து, நபில்கள் யாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். மறுவேளைத் தொழுகைக்கு புதிதாக ஒளுச்செய்ய வேண்டுமேயன்றி, அதே ஒளுவைக் கொண்டு அடுத்த நேரத்துத் தொழுகையைத் தொழக் கூடாது. காரணம், அந்நேரத்தொழுகையின் நேரம் கடந்து விடுவதன் மூலம் இத்தகையவர்களின் ஒளு முறிந்து விடுகிறது.

## தண்ணீரின் சட்டம்

வினா : எந்தெந்த நீரினால், ஒளுவும், குளிப்பும் நிறைவேறும்?

விடை : மழைநீர், கிணற்றுநீர், குளத்துநீர், ஆற்றுநீர், கடல்நீர், ஓடும் தண்ணீரினாலும் ஒளுவும் குளிப்பும் நிறைவேறும்.

வினா : தண்ணீரின் சுவை, மணம், நிறம் இவைகள் பாதகமாகியிருந்தால் அந்நீரைக் கொண்டு ஒளுவையோ, குளிப்பையோ நிறைவேற்றிக் கொள்ளலாமா?

விடை : தண்ணீரில் தூய்மையான பொருள்கள் அதாவது, மண், சவர்க்காரம், குங்குமப்பூ போன்றவைகள் விழுந்ததன் காரணமாக தண்ணீர் பேதகமாகி இருந்தால் அந்நீரால் ஒளு, குளிப்பு முதலியவற்றை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வினா : ஓடும் நீரில் அசுத்தமான ஒரு பொருள் விழுந்திருந்தால் அந்நீர்பயன்படுத்தத் தகுதியானதா?

விடை : ஓடும் நீரின் தன்மைகளான சுவை, மணம், நிறம் இவற்றில் எது ஒன்றும் கெடாதிருப்பின் அந்நீர் பயன்படுவதற்குரியதேயாகும். அவ்வாறின்றி, மணம், சுவை, நிறம் முதலியவற்றில் ஏதாவதொன்று மாறுபட்டிருந்தால் பயன்படுத்தக் கூடாது.

## கிணற்றின் சட்டம்

வினா : கிணற்றில் புறா, பூனைப் போன்றவை விழுந்து ஊதிப் போகாமலும் வெடிக்காமலும் இருந்தால் அதன் சட்டமென்ன?

விடை : அக்கிணற்றிலிருந்து நாற்பது வாளி நீர் முதல் அறுபது வாளிகள் வரையும் இறைக்க வேண்டும்.

வினா : எலி, சிட்டுக்குருவி போன்றவை விழுந்து ஊதாமல், வெடிக்காமல் கிடக்குமாயின் அதன் சட்டமென்ன?

விடை : அக்கிணற்றிலிருந்து இருபது முதல் முப்பது வாளிகள் வரை நீர் இறைத்து விட்டால் அது துப்பரவு ஆகிவிடும்.

வினா : கிணற்றிலோ, ஹவ்ளுகளிலோ ஈ, கொசு, மீன், நண்டு, தவளைப் போன்றவைகள் விழுந்து செத்துக் கிடந்தால் அந்நீரானது சுத்தமானதா?



விடை : எந்த ஓர் உயிரினத்தின் உடலில் இரத்தம் ஓடாமல் இருக்குமோ அத்தகைய ஓர் உயிர் கிணற்றிலோ, ஹவ்ளுகளிலோ விழுந்துச் செத்திருந்தாலும், அல்லது அவற்றுள் செத்தே கிடந்தாலும் அவைகள் துப்பரவானவைகளேயாகும்.

வினா : ஒரு கிணற்றில் எலி போன்ற ஓர் உயிர் அல்லது ஏதாவது நஜீஸ்கள் விழுந்துச் செத்துக் கிடந்தாலோ, வீங்கி வெடித்துச் சிதறி இருந்ததை அறியாமல் ஒருவர் அந்நீரில் குளித்திருந்தால், ஒளுச் செய்து தொழுதிருந்தால் அவரின் நிலை என்ன?

விடை : அக்கிணற்றில் நஜீஸ் விழுந்ததுமே அந்த நீர் அசுத்தமாகிவிட்டது. எனவே, அந்த அசுத்தம் விழுந்த நேரம் எதுவென்று தெரிந்தால், அந்நீரில் ஒளுவோ, குளிப்போ நிறைவேற்றியவர் அந்நேரத்திலிருந்து அவர் தொழுத எல்லா தொழுகைகளையும் அவர் மீண்டும் தொழ வேண்டும். அது விழுந்து செத்த நேரம் அறியாது போயின், அவ்வுயிர்ப்பிராணி வெடிக்காதும், ஊதிப்போகாமலும் இருப்பின், அத்தண்ணீரில் ஒளுவையும், குளிப்பையும் நிறைவேற்றியவர் ஓர் இரவு, ஒரு பகல் தொழுகையைத் திரும்பத் தொழ வேண்டும்; அல்லது, அவ்வுயிர்ப் பிராணி ஊதி வெடித்துச் செத்திருக்குமானால், அத்தண்ணீரில் ஒளுவையும், குளிப்பையும் நிறைவேற்றியவர் மூன்று இரவு, பகல் தொழுகைகளைத் திரும்ப தொழ வேண்டும்.

வினா : கோழி, பூனை அல்லது அவை அளவுள்ள உயிர்ப்பிராணிகள் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டால் அதன் சட்டமென்ன?

விடை : வினாவில் கண்ட உயிர்ப்பிராணிகள் விழுந்து இறந்துவிடின் நாற்பது வாளிகளுக்குக் குறையாமல் அக்கிணற்று நீரை இறைத்து விடவேண்டும். அறுபது வாளிகள் வரை இறைப்பது முஸ்தஹப்பு என்னும் விரும்பத்தக்கதாகும்.

வினா : பத்துமுழ நீளம், பத்துமுழ அகலம் கொண்டதாக இல்லாத கிணறு, நீர்த்தொட்டிகள் முதலியவற்றில் உள்ள நீரில்

அசுத்தங்கள் விழுந்தாலோ, மனிதன், நாய், எலி போன்றவை விழுந்து இறந்துபோனாலோ அந்நீரின் சட்டமென்ன?

விடை : வினாவில் கண்ட கிணறு, நீர் நிலைகளில் மனிதன் விழுந்து இறந்து போனாலும், ஆடு, நாய் போன்றவைகள் விழுந்துச் செத்துக் கிடந்தாலும், பன்றி விழுந்தாலும், இவை சாக வேண்டியதில்லை. நீரில் விழுந்து ஊதி வெடித்து இறந்திருந்தாலும், சிறிய உயிரினமாக இருந்திடினும், கிணற்றுநீர் முழுவதையும் இறைத்துவிட வேண்டும். நீர் முழுவதையும் இறைத்திட முடியாது போய் விடின், அக்கிணற்றில் தண்ணீர் எடுக்கப் பயன்படுத்தப்படும் கடகால் (கடால்) வாளி இவைகளில் நடுத்தரமான தோற்பரையால் 200 வாளிகள் வரையும் அதன் நீரை இறைத்து விடவேண்டும். நீர் முழுவதையும் இறைத்து விடுவது முஸ்தஹப்பு ஆகும். 200 வாளிகள் குறையாதிருக்க வேண்டும்.

## 'சுன்னத்தே முஅக்கதா' எனும் கட்டாய சுன்னத்து!

வினா : பாங்கு, இகாமத் சொல்லவேண்டிய தேவை என்ன? அவற்றை எந்தெந்த நேரங்களில் சொல்ல வேண்டும்?

விடை : ஐவேளைத் தொழுகைகளுக்கும் பாங்கும், இகாமத்தும் சொல்லுவது, 'சுன்னத்தே முஅக்கதா' என்னும் கட்டாய சுன்னத்தாகும்; அது நேரத்தொழுகை யாயினும், களாத் தொழுகையாயிருப்பினும், தனித்துத் தொழுவதானாலும் சரி பாங்கும் இகாமத்தும் சொல்லப் படவேண்டும்.

வினா : பாங்கிற்குப் பதில் சொல்வது அவசியமா?

விடை : ஆம்; பாங்குக்கு பதில் சொல்வது வாஜிப் என்றும், முஸ்தஹப்பு என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, பாங்கு சொல்லும்போது பேசுவதும் குர்ஆன் ஓதுவதும் மற்ற காரியங்களில் ஈடுபடுவதும் முறையல்ல.



மேலும், ''எவன் பாங்கிற்கு பதில் சொல்லா திருப்பானோ அவன் மரணமாகும்போது 'கலிமா ஷஹாதத்' மொழிவதற்குத் தடுமாறுவான்; அவனின் நாவு கலிமாவை மொழியாது'' என்று 'தஃபுஸ் ஸாலிஹீன்' என்னும் கிதாபில் எழுதப்பட்டுள்ளது.

வினா : பாங்கு சொல்லும் முறை எப்பொழுது ஏற்படுத்தப் பட்டது?

விடை : ஹிஜ்ரி முதலாவது ஆண்டு மதீனா முனவ்வராவில் ஏற்படுத்தப்பட்டது.

வினா : அது எவர்மூலம் ஏற்படுத்தப்பட்டது?

விடை : மிஃராஜுடைய இரவன்று நபி (ஸல்) அவர்கள் நபிமார்கள் அனைவருக்கும் இமாமத் செய்தபோது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பாங்கும், இகாமத்தும் கூறினார்கள். அதன் பின்னர், அப்துல்லாஹ் இப்னு ஜைது (ரலி) அவர்கள் பாங்கு, இகாமத்தினுடைய சொற்களைக் கனவின் மூலம் கண்டு நபி (ஸல்) அவர்களிடம் அறிவித்தார்கள். அதன் பிறகே இவ்வழக்கம் நடைமுறைக்கு வந்தது.

வினா : பெண்களுக்கு பாங்கும், இகாமத்தும் சுன்னத்தா?

விடை : பெண்களுக்கு இவை இரண்டும் 'மக்ரூஹ்' ஆகும்.

வினா : எவரெவர் பாங்குக்கு பதில் சொல்லக் கூடாது?

விடை : ஹைளு, நிபாஸ்கார பெண்கள், குத்பா ஓதப்படுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவன், ஜனாஸா தொழுகையில் சேர்ந்திருப்பவன், கல்வி கற்றுக் கொண்டிருப்பவன், கற்றுக் கொடுத்துக் கொண்டிருப்பவன், சாப்பிட்டுக் கொண்டிருப் பவன், உடலுறவில் ஈடுபட்டிருப் பவன், மலம், சிறுநீர் கழித்துக் கொண்டிருப்பவன் பதில் சொல்வது வாஜிபில்லை. சிறுநீர், மலம் கழித்துக் கொண் டிருப்பவன் தன் மனதிற்குள் சொல்லிக் கொள்ளலாம். குர்ஆன் ஓதுபவனும், ஜுனுபாளியும் பதில் சொல்வது அவசியம்.

வினா : பாங்கு சொல்லி முடித்தபின் என்ன ஓதுவது?

விடை : பாங்கு சொல்லி முடிந்தபின் துஆ ஓத வேண்டும். அதாவது :

அல்லாஹூம்ம ரப்ப ஹாதிஹித் தஃவத்தித் தாம்மத்தி வஸ்ஸலாத்தில் காயிமத்தி ஆத்தி ஸய்யிதினா முஹம்மதினில் வஸீலத்த வல்Fபளீல (த்)த வத்தரஜத்தர் ரFபீ அத்தல் ஆலியதஷ் ஷரீFபத்த வப்அத்ஹூ மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹூவர்Z ஜுக்னா ஷபா அத்தஹூ வ அவ்ரித்னா ஹவ்ளஹூ யவ்மல் கியாமத்தி இன்னக லா துக்லி F புல் மீஆத்.

பொருள் : அல்லாஹ்வே! இந்தப் பரிபூரணமான அழைப் புக்கும், நிலையானத் தொழுகைக்கும் உரிய அல்லாஹ்வே! எமது நபிகள் நாயகம் முஹம்மது நபி (ஸல்-அம்) அவர்களுக்கு உயர் பதவியையும், மேன்மையையும் கொடுத்தருள்வாயாக! மேலும், அவர்களுக்கு நீ வாக்களித்திருக்கும் (அந்தப் போற்றற்கரிய) பதவிக்கு அவர்களை நீ எழுந்தருளச் செய்வாயாக. நீ எங்களுக்கு அவர்களின் ஷபாஅத்தையும்; அவர்களுடைய ஹவ்ளுல் கவ்தரையும் தந்தருள்வாயாக. நீ, நிச்சயமாக வாக்குறுதி மாறமாட்டாய்.

வினா : பகல், இரவு இரு வேளைகளிலும் சுன்னத்து முஅக்கதா, சுன்னத்து, வாஜிபு தொழுகைகள் எத்தனை இருக்கின்றன?

விடை : பஜ்ரில் சுன்னத்து முஅக்கதா இரண்டும், பர்ளு இரண்டும், லுஹரில் முன் சுன்னத்துகள் நான்கும், பர்ளு நான்கும், பின் சுன்னத்து இரண்டும், அஸரில் சுன்னத்துகள் நான்கு ரகஅத்துகளும், ஃபர்ளு நான்கும், மஃரிபில் ஃபர்ளு மூன்று ரகஅத்துகளும், பின் சுன்னத்துகள் இரண்டும், இஷாவில் முன் சுன்னத்துக்கள் நான்கும், ஃபர்ளு நான்கும், பின் சுன்னத்துகள் இரண்டும், வாஜிபு மூன்றும், ஜும்ஆவில் முன் சுன்னத்துகள் நான்கும், ஃபர்ளு இரண்டு ரகஅத்துகளும், பின் சுன்னத்துக்கள் ஆறு ரகஅத்துகளுமாகும்.



(குறிப்பு : அஸருடைய சுன்னத்தும், இஷாவுடைய முன் சுன்னத்தும் கட்டாயமல்ல.)

வினா : தொழுகையில் மொத்த ஃபர்ளுகள் எத்தனை?

விடை : மொத்தம் பதிமூன்று ஃபர்ளுகள் உள்ளன. அவற்றுள் ஏழு பர்ளுகள் வெளி ஃபர்ளுகளும் உள் ஃபர்ளுகள் ஆறும் ஆகும்.

வினா : தொழுகையின் வெளி ஃபர்ளுகள் என்னென்ன?

விடை : 1. உடல் துப்புரவாக இருத்தல். 2. உடை துப்புரவாயிருத்தல். 3. தொழுகின்ற இடம் துப்புரவாக யிருத்தல். 4. மறைக்க வேண்டிய பகுதிகளை மறைத்தல். 5. தொழுகையின் நேரம்அறிதல் 6. கஃபாவை முன்னோக்குதல். 7. நிய்யத்துச் செய்தல்.

வினா : தொழுகையின் உள் ஃபர்ளுகள் யாவை?

விடை :1. தக்பீர் தஹ்ரீமா சொல்லுதல், அதாவது ஆரம்பிக்கும்போது அல்லாஹு அக்பர் என்று வாய்விட்டுச் சொல்லுதல், 2. நின்று தொழுதல், 3. கிராஅத் ஓதுதல், 4. ருகூவு செய்தல், 5. இரு சஜ்தாக்கள் செய்தல், 6. கடைசி இருப்பு இருத்தல், இவற்றில் எந்த ஒரு ஃபர்ளான செயல் விடுபட்டாலும் தொழுகை நிறைவேறாது.

வினா :வெளி ஃபர்ளில் வெட்கத்தலத்தை மறைத்தல் என்பதில் ஆண்கள் எதிலிருந்து எதுவரை மறைப்பது ஃபர்ளு? பெண்கள் எதிலிருந்து எதுவரை மறைப்பது ஃபர்ளாகும்?

விடை : ஆண்கள் கொப்புழ் தொடுத்து முழங்கால்கள் வரையும், பெண்கள் இரு உள்ளங்கைகள், இரு பாதங்கள் தவிர உடல் முழுவதும் மறைத்தல் ஃபர்ளாகும்.

வினா : தொழுகைக்குரிய ஃபர்ளுகளில் ஒன்று விடுபட்டு விட்டால் அத்தொழுகை நிறைவேறுமா? நிறைவேறாதா?

விடை : அத்தொழுகை நிறைவேறாது.

# தொழுகையின் வாஜிபுகள்

வினா : தொழுகையின் வாஜிபுகள் எத்தனை?

விடை : தொழுகையின் வாஜிபுகள் பதினெட்டு!

1. சூரத்துல் ஃபாத்திஹா என்னும் அல்ஹம்து ஓதுவது. அதை முழுமையாக ஓதுவது; அதில் உள்ள ஓர் ஆயத்தைத் தவறவிட்டாலும் சஜ்தா சஹ்வு செய்வது வாஜிபாகும்.

2. அல்ஹம்துடன் ஒரு லம்மு சூராவை ஓதுதல். ஒரு சூராவையோ அல்லது மூன்று சிறிய ஆயத்தையோ ஓதுதல். பெரிய ஆயத்தாக இருந்தால் ஓர் ஆயத்தேனும் ஓதுதல். அடுத்து, ஃபர்ளான தொழுகைகளில் முதல் இரண்டு ரக அத்துகளுக்கு மட்டுமே சூரா ஓதவேண்டும். லுஹரில் முந்தின இரண்டு ரகஅத்களிலும், அஸரில், மஃரிபில், இஷாவில் முதல் இரண்டு ரகஅத்களிலும் ஓத வேண்டும். மேலும், சுன்னத், நபில், வாஜிபுகளில் எல்லா ரகஅத்துகளிலும் அல்ஹம்துடன் சூரா ஓத வேண்டும்.

3. அல்ஹம்து சூராவை, லம்மு சூராவிற்கு முன்னதாக ஓத வேண்டும்.

4. பர்ளு தொழுகைகளில் முந்தின இரண்டு ரகஅத்துகளில் குறிப்பாக கிராஅத் ஓதுதல்.

5. சுஜூது செய்யும்போது நெற்றியுடன் மூக்கையும் தரையில் வைப்பது வாஜிபு.

6. ஒவ்வொரு இரு சஜ்தாகளுக்கு இடையில் வரிசையைப் பேணுவது, அதாவது ஒவ்வொரு ரகஅத்திலும் இரண்டாவது சஜ்தாவை செய்தபின்னர், அடுத்த ரக அத்தைத் தொடர வேண்டும்.

7. ருகூவிற்குப் பின்னர் 'கவ்மா'வில் நிலையில் ஒரு தஸ்பீஹ் அளவிற்குத் தாமதித்தல்.



8. இரு சஜ்தாக்களுக்கு இடையில் 'கஃஃதா' இருப்பில் ஒரு தஸ்பீஹ் கூறும் அளவிற்குத் தாமதித்தல்.

9. முதல் இருப்பு இருத்தல்.

10. முதல் இருப்பில் அத்தஹிய்யாத்தை 'அப்துஹு வரசூலுஹு' வரை ஓதுதல்.

11. கடைசி இருப்பில் 'அப்துஹு வரசூலுஹு' வரை அத்தஹிய்யாத்து ஓதுதல்.

12. முதலாவது இருப்பில் 'அப்துஹுவரசூலுஹு' வரை ஓதி முடித்துவிட்டால் தாமதமின்றி உடனே நிலைக்கு அதாவது மூன்றாவது ரகஅத்திற்கு எழுந்து விடுதல்.

13. அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி தொழுகையை முடித்தல்.

14. வித்ரு தொழுகையில் குனூத் ஓதுதல்.

15. இருபெருநாள் தொழுகைகளில் கூடுதலான ஆறு தக்பீர்கள் சொல்லுதல்.

16. இரைந்து ஓதும் தொழுகைகளில் பிறருக்குக் கேட்குமாறு உரக்க ஓதுதல். 'சிர்'ராக மெல்ல ஓதுகின்ற தொழுகைகளில் ஓசையின்றி தனக்கு மட்டும் கேட்குமாறு ஓதுதல்.

17. பெருநாள் தொழுகையில் இரண்டாவது ரகஅத்தில் ருகூவிற்கு முன்னர் தக்பீர் சொல்லுதல்.

18. ஒவ்வொரு தொழுகையின் துவக்கத்திலும் தக்பீருக்குரிய சொல்லை அதாவது அல்லாஹ் என்பதுடன் அக்பர் என்னும் சொல்லையும் சேர்த்து சொல்லுதல்.

வினா : வாஜிபுகளில் ஒன்றுவிடுபட்டுப் போனாலும் அல்லது அதனை முன்பின் நிறைவேற்றினாலும் தொழுகை கூடுமா?

விடை : வாஜிபை வேண்டுமென்றே தெரிந்து விட்டு விட்டால் அத்தொழுகையை மீண்டும் தொழ வேண்டும். மறதியாகவோ, முன்பின்னாகவோ செய்திருந்தால் 'ஸஹ்வு சஜ்தா' செய்ய வேண்டும்.

வினா : 'ஸஹ்வு சஜ்தா' செய்யும் முறை யாது?

விடை : கடைசி இருப்பில் 'அத்தஹிய்யாத்'து மட்டும் ஓதி, ஒரு பக்கம் சலாம் கொடுத்து, இரு சஜ்தாக்கள் செய்து, மீண்டும் 'அத்தஹிய்யாத்'து, 'தரூது', துஆயெ மஃசூரா முதலியவற்றை ஓதி இருபக்கமும் சலாம் கொடுக்க வேண்டும். எனினும், இரண்டு பெருநாள் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகைகளில் ஸஹ்வு சஜ்தா மன்னிக்கப்பட்டுள்ளது. காரணம் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தக் கூடாது என்பதனால் ஆகும்.

## தொழுகையின் சுன்னத்துகள்

வினா : தொழுகையின் சுன்னத்துகள் எத்தனை?

விடை : தொழுகையின் சுன்னத்துகள் 22.

வினா : அவைகள் என்னென்ன?

விடை : 1. 'தக்பீர் தஹ்ரீமா' என்னும் முதல் தக்பீரை ஆரம்பிக்கும்போது ஆண்கள் இரு கைகளையும் காதின் சோணை வரை உயர்த்துதல்.

2. பெண்கள் தம் தோள் புயம் (புஜம்) வரை உயர்த்துதல்.

3. கைகளைக் கட்டும்போது விரல்களை அதிகம் விரிக்காமலும், சுருக்காமலும் நடுத்தரமான அளவிற்கு விரல்களை விரித்துவைத்தல்.

4. இமாமைத் தொடர்ந்த முக்ததீகளும் தக்பீர் கட்டுதல்.

5. தக்பீரை இமாம் இரைந்து சொல்லுதல்.

6. தலையைத் தாழ்த்தாமல் தக்பீர் கட்டுதல்.



7. ஆண்கள் தம் கைகளைத் தொப்புளுக்குக் கீழ் இடக்கைக்கு மேல் வலக்கையை வைத்தல். அவ்வாறு வைக்கும்போது, இடக்கையின் மணிக்கட்டின் மீது வலக்கையின் சுண்டு விரலாலும், பெருவிரலாலும் பிடித்துக் கொள்வது.

8. முதல் ரக்அத்தில் 'ஸனா'வை மெல்ல ஓதுதல்.

9. அவூது, பிஸ்மி முதலியவற்றையும், ஆமீன் என்பதையும் கூறுதல்.

10. தொழுகையில் எழும்போதும், உட்காரும்போதும் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லுதல்.

11. ருகூவில் 'சுப்ஹான ரப்பியல் அளீம்' என்ற தஸ்பீஹை மூன்றுமுறைக் கூறுதல்.

12. ருகூவின்போது விரல்கள் விரித்து முழங்கால்களை அழுத்தமாகப் பிடித்தல்.

13. தனித்துத் தொழுபவரும் இமாமும் நிலைக்கு வரும்போது, 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்' எனச் சொல்லுதல்.

14. இமாமைத் தொடர்ந்தவர் 'ரப்பனா ல(க்)கல் ஹம்து' எனச் சொல்லுதல்.

15. சுஜூதில் மூன்று விடுத்தம் 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்ற தஸ்பீஹைச் சொல்லுதல்.

16. சுஜூதில் இரண்டு முட்டுக்கால்களையும் முதலில் வைத்தல் பிறகு இரண்டு கைகளையும், பின்னர் முகத்தையும் நிலத்தில் வைத்தல்.

17. சுஜூதில் ஆண்கள் தம் தொடைகளை வயிற்றுடன் சேர்க்காமல் விலக்கிவைப்பதுடன், முழங்கைகளை விலாவுடன் சேர்க்காமல் விலக்கி வைப்பதுடன், நிலத்தில் (தரையில்) இருகைகளையும் படுக்க வைக்காமலிருத்தல். ஆனால்,

பெண்கள் தம் துடைகளை வயிற்றுடன் இணைத்து, கைகளை பூமியில் படுக்க வைத்து விலாவுடன் சேர்த்து கொள்ளுதல்.

18. இருப்பில் ஆண்கள் இடக்காலின்மீது அமர்ந்து வலக்காலை நட்ட வைத்தல்.

19. இருப்பில் 'அத்தஹிய்யாத்'து ஓதும்போது வலக்கையின் கலிமா விரலை நீட்டுதல்.

20. அத்தஹிய்யாத்து இருப்பில் 'தரூதுஷரீப்' ஓதுதல். அதன்பின் 'துஆயெ மஃசூரா' ஓதுதல்.

21. சலாம் கொடுக்கும்போது வலப்புறமும் இடப்புறமும் திரும்புதல்.

22. இமாம் சலாம் கொடுக்கும்போது முக்ததீகள் ஜின்களையும் மலக்குகளையும் மனத்துள் நிய்யத்துச் செய்தல்.

இன்னும் சில சுன்னத்துகள் இருக்கின்றன. அவைகள் கட்டாயமல்ல. சுன்னத்துகள் கூடுதலாகவும் குறைதலாகவும் இருக்கலாம். இவைபோதும்.

வினா : மேற்கூறப்பட்ட சுன்னத்துகளை நிறைவேற்றாது போனால் தொழுகை நிறைவேறுமா?

விடை : மக்ரூஹ் ஆகும்.

## தொழுகையின் மக்ரூஹ்கள்

வினா : தொழுகையின் மக்ரூஹ்கள் எவை?

விடை : தொழுகையின் 'மக்ரூஹ்கள்' எழுபத்தேழு இருப்பதாக 'மராக்கில் பலாஹ்' என்னும் நூலில் குறிக்கப்பெற்றுள்ளது. தொழுகையிலுள்ள சுன்னத்து, வாஜிப்போன்றவற்றை விட்டு விடல் 'மக்ரூஹ்' ஆகும். 'மக்ரூஹ் தஹ்ரீமு'டன் தொழுகையை முடித்து கொண்டால் தொழுகை நிறைவேறிவிடும். ஆயினும் அதனைத் திரும்பத் தொழுவது 'அஃப்லல்' சிறப்பாகும்.



வாஜிபை விடுவதன் மூலம் 'ஸஹ்வு ஸஜ்தா' செய்ய்க வேண்டும். 'மக்ரூஹ்'கள் நிகழ்வதன் காரணமாகத் தொழுகை முறியாவிட்டாலும், நன்மைகள் குறைந்து விடுகின்றன. இயன்றவரை அவற்றைத் தவிர்ப்பதே தொழுகையாளரின் கடமையாகும்.

## மக்ரூஹ்களில் சில வருமாறு :

1. இமாம் ஒரு முழ உயரத்திலும், முக்ததீகள் பள்ளமான இடத்திலும் காரணமின்றித் தொழுவது.

2. நாய் இருப்பு இருப்பது. (அத்தஹிய்யாத்தில்)

3. இருதோள் புயங்களிலும் துண்டைத் தொங்க விட்டுக் கொள்வது.

4. விரல்களை நெட்டி முறிப்பது.

5. சுஜூதில் முழங்கைகளைப் படுக்க வைப்பது.

5a. பிறர் சலாம் கூறினால் சைகை மூலம் பதில் கூறுவது.

6. எந்த இடத்தில் தொழுவதால் சிரிப்பு மூட்டப் பட்டு விடலாம், அல்லது மன ஓர்மைத் தவறிவிடும் அல்லது தொழுகையில் தவறு நிகழ்ந்துவிடும் என்னும் அச்சம் ஏற்படுமோ அத்தகைய இடத்தில் தொழுவது.

7. தனது உடை, உடல், அணிந்திருக்கும் நகைகளுடன் விளையாடுவது, பொடிக்கற்களை அகற்றுவது இக்கற்களினால் சஜ்தாவுக்கு இடையூறு ஏற்படுமாயின் ஓரிரு முறை கையால் அகற்றுவது கூடும்.

8. தேவையின்றி உடலை அசைப்பது, அங்குமிங்கும் பார்ப்பது.

9. மோப்பம் பிடிப்பது.

10. மனிதருக்கு எதிரில் தொழுவது.

11. முதல் ரகஅத்தில் ஓதிய சூராவிற்கு மேலுள்ள சூராவை இரண்டாவது ரகஅத்தில் ஓதுவது.

12. ஒரு திர்ஹம் அளவிற்கு குறைவாக நஜீஸ்பட்டிருப்பதை அறிந்தும் அதனை அகற்றாமல் தொழுவது.

13. இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நிற்பது.

14. சோம்பல் முறிப்பது.

15. கண்களை மூடிக்கொண்டு தொழுவது.

16. தொழுமிடத்திற்கு நேராக, அல்லது மேற்பகுதியில் இருபக்கமும் உருவப்படங்கள் வைப்பது.

17. திறந்த தலையுடன் தொழுவது.

18. கொட்டாவியின் போது வாயை மூடாதிருப்பது.

19. தலைமயிர் வைத்திருப்பவர் தொழுது கொண்டே கொண்டையைப் போடுவது.

20. முந்தின ரகஅத்தில் சிறிய சூராவையும், இரண்டாம் ரகஅத்தில் பெரிய சூராவையும் ஓதுவது.

21. குறிப்பிட்ட தொழுகையில் குறிப்பிட்ட சூராக்களையே ஓதுவது என்று நியமனம் செய்து கொண்டு அவற்றையே ஓதுவது.

22. வாயில் காசு, வேறு எதனையாவது அடக்கி வைத்தவாறு தொழுவது. வாயில் வைத்துள்ள பொருளால் குர்ஆன் ஓத இடையூறு ஏற்படுமாயின் அத்தொழுகை முறிந்து விடும்.

23. மலம், சிறுநீர் முதலியவற்றை அடக்கி கொண்டு தொழுவது 'மக்ரூஹ்' ஆகும். (எனினும் தொழுகையின் நேரம் தவறிவிடும் என்னும் அச்சமிருப்பின், இந்நிலையில் தொழலாம்.)



24. பசி மிகுதியாயிருந்து, உணவும் தயாராயிருந்தால், முதலில் உணவை உட்கொண்டு விட்டுப் பின்னர் தொழ வேண்டும். உணவை உண்ணாது பசியுடன் தொழுவது 'மக்ரூஹ்'.

25. தேவையின்றி தொழுகையில் துப்புவது, மூக்கைத் துடைப்பது 'மக்ரூஹ்' ஆகும். எனினும் அவசியம் ஏற்பட்டு, அதாவது இருமல், வாயில் காரல் எச்சில் வந்து விடுமாயின், தமது இடப்பக்கம் துப்பிக் கொள்வதும், துணியில் அந்த எச்சிலை எடுத்துக் கொள்வதும் கூடும். வலப்பக்கமோ, கிப்லாவை நோக்கியோ துப்பக்கூடாது.

இன்னும் பல 'மக்ரூஹா'ன செயல்கள் உள்ளன. அவைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## தொழுகையின் முறித்தல்கள்

வினா : தொழுகையின் முறித்தல் எவை?

விடை : 1. தொழும்போது யாதொன்றைத் தின்றாலும், குடித்தாலும், பேசினாலும் தொழுகை முறிந்து போகும். தன் பற்களுக்கிடையே சிக்கி விட்ட பொருள் கடலைப் போன்றதை விடச் சிறியதாயிருந்து அதனை விழுங்கி விட்டால் தொழுகை முறியாது.

2. காரணமின்றி, கனைத்தல், தும்முதல், இருமல் போன்ற செயல்களால் இரண்டு எழுத்துக்களின் சத்தம் வெளியாகி விடுமாயின் தொழுகை முறிந்து விடும். ஆனால், காரணத்துடன் (தங்கடம்) இருமல், கனைத்தல் மூலம் இரண்டு எழுத்துகள் வெளியாகி விடுமாயின் தொழுகை முறியாது.

3. திருக்குர்ஆனைப் பார்த்து ஓதுவதன் மூலம் தொழுகை முறிந்து விடும்.

4. திருக்குர்ஆனை அதன் பொருள் மாறும்படி ஓதினால்,

5. தம்மைப் பின்பற்றி தொழுபவர்களைத் தவிர்த்து வேறொருவர் பிழைத்திருத்தம் செய்வதைக் கேட்டு ஓதினால் தொழுகை முறிந்து விடும்.

6. ஒருவர் (தொழுகையில்) இரைந்து கூறுமாறு கூறியதைக் கேட்டு, அவ்வாறே இரைந்து கூறினால்,

7. உலகத்தின் கவலையை எண்ணி உரக்க அழுதால்,

8. சலாமுக்குப் பதில் கூறினால்,

9. இமாமுக்கு முந்தி நின்றால்,

10. காரணமின்றித் தனது நெஞ்சைக் 'கிப்லா'வை விட்டுத் திருப்பினால்,

11. தண்ணீர்க் கிடைக்காத காரணத்தால் தயம்மும் செய்தவர், தண்ணீரைப் பெற்றுக் கொண்டால்,

12. பர்ளான செயல்களைச் செய்யத் தவறினால் தொழுகை முறிந்துவிடும்.

13. மகிழ்ச்சி, கவலை, ஆச்சரியமான செய்திகளைக் கேட்டு அவற்றுக்கு மறுமொழியாக இன்னாலில்லாஹி, அல்ஹம்து லில்லாஹி, சுப்ஹானல்லாஹி போன்றவற்றைக் கூறுதல்.

13. தக்பீரை இரைந்து சொல்லுங்கள் என்று ஒருவர் கூற அதைக் கேட்டு இரைந்து கூறுதல்.

14. மனிதர்களின் பேச்சுக்கு ஒப்பான துஆக்களைத் தொழுகையில் கூறுதல்.

15. தொழுது கொண்டிருக்கும் போது சூரியன் உதயமாகிவிட்டது என்னும் அறிகுறியான ஒளிக்கதிர்களைப் பார்த்தல்.



16. தொழுகையில் ஒளு முறிந்து விட்டாலோ, பைத்தியம் பிடித்து விட்டாலோ, போதைக் கேடு ஏற்பட்டு விட்டாலோ, தன் உணர்வு இழந்து விட்டாலோ தொழுகை முறிந்துவிடும்.

17. தொழுகையில் வேறொருவர் தும்மலுக்குப் பதில் கூறும் முகத்தான் 'யர்ஹமுகல்லாஹ்' எனக் கூறுதல்.

இவையன்றி, சுஜூதில் நெற்றி, இருபாதங்கள், இரு முழங்கால்கள், இருகைகள், காலின் விரல் நுனிகள் வைப்பதும் ஃபர்ளுகளாகும். நெற்றியை பூமியில் வைக்காமலோ, இருகால்களை மேலே தூக்கிவிட்டாலோ தொழுகைக் கூடாமல் ஆகிவிடும்.

கேள்வி : தொழுகையின் (அதப்) ஒழுக்கங்கள் யாவை?

பதில் : 1) தக்பீர் தஹ்ரீமா கட்டுமுன் தனது சட்டைக் கையை நீக்கி, இரு கைகளையும் துணியை விட்டும் வெளியாக்குவது.

2. நிலையிலிருக்கும் போது தொழுபவர் ஆணோ பெண்ணோ சஜ்தா செய்யும் இடத்தை நோக்குதல்.

3. ருகூவின் போது தம்மிருகால் பாதங்களை நோக்குதல்.

4. சுஜூதின்போது கண்கள் மூக்கை நோக்கியிருத்தல்.

5. இருப்பில் (அத்தஹிய்யாத்தில்) தம் மடியைப் பார்த்தல்.

6. ஸலாமின்போது தம்மிரு தோள் புயங்களைப் பார்த்தல்.

7. தும்மல் வந்தால் இயன்றவரை அடக்குவது.

8. கொட்டாவி வந்தால் இயன்றவரை அடக்குவது.

9. இகாமத்தின் போது 'ஹய்யஅலல் ஃபலாஹ்' எனக் கூறும்போது மக்கள் தொழுகைக்கு எழுதல்.

10. 'கத்காமத்திஸ்ஸலாத்' என்று கூறியதுமே இமாம் தொழுகையை ஆரம்பித்து விடுவது. இகாமத்துச் சொல்லி முடியும் வரை இமாம் தொழுகையை துவங்காமலிருந்தாலும்

குற்றமில்லை. இகாமத்துச் சொல்லி முடிந்ததும் இமாம் தொழுகையை துவங்காமலிருந்தாலும் குற்றமில்லை. இகாமத்துச் சொல்லி முடிந்ததும் இமாம் நீண்ட நேரம் தக்பீர் கட்டுவதைப் பிற்படுத்தக் கூடாது.

## கஸர்த் தொழுகை

வினா : கஸர்த் தொழுகை எவர்மீது விதியாகும்?

விடை : நடுத்தரமான நடையால் மூன்றுநாள் பயணத்தை மேற்கொண்டவன், தன்னூரின் எல்லையை விட்டும் பயணம் செல்பவன் மீது, 'கஸர்'த் தொழுகை விதியாகும்.

வினா : முஸாஃபிர் மீது எதுவரையும் கஸர் விதியாகும்?

விடை : முஸாஃபிர் ஓர் ஊரில் பதினைந்து நாட்களுக்கும் குறைவாகத் தங்கும் நாட்டம் கொண்டிருப்பின் கஸர்த் தொழுகை விதியாகும்.

வினா : கஸர் எவ்வாறு தொழுவது?

விடை : நான்கு ரகஅத்து ஃபர்ளு தொழுகைகளை இரண்டிரண்டாகத் தொழ வேண்டும்.

வினா : கஸர்த்தொழுகையை நான்கு ரகஅத்துகளாகத் தொழுவதால், மீதி இரண்டு ரக அத்துகள் நிலை என்ன?

பதில் : கஸரை இரண்டிற்குமேல் நான்காகத் தொழுவதால், இரண்டு நஃபிலாகிவிடும்; அவன் அவ்வாறு தொழுதால் குற்றவாளியாவான்.

வினா : இரண்டு ரகஅத்துகளை நான்காகத் தொழுவதால் அவர் எவ்வாறு குற்றவாளியாவார்?

விடை : கஸர்த் தொழுகை விதியானவருக்கு முந்தின இருப்பில் ஸலாம் கொடுக்கப்பட்டுள்ளது. ஸலாம் கொடுப்பதை விதியாக்கப்பட்டதை அவர் தாமதித்த காரணத்தாலும், அல்லாஹ் அவருக்கு அளித்திருந்த தனிச் சலுகையை மீறியதாலும் அவர் குற்றவாளியாகின்றார்.



வினா : முஸாபிர் முகீமையோ, முகீம் முஸாபிரையோ தொடரலாமா?

விடை : முஸாபிர் முகீமையும், முகீம் முஸாபிரையும் தொடர்ந்துத் தொழலாம். எனினும், முஸாபிர் முகீமைத் தொடர்ந்துத் தொழுதால் அவர் முழுமையாக நான்கு ரகஅத்துகளையும் தொழவேண்டும். மேலும் முகீம் முஸாஃபிரைத் தொடர்ந்தால், முஸாபிரான இமாம் இரண்டாம் ரகஅத்தில் சலாம் கொடுத்ததும், முகீம் எழுந்து மீதி இரண்டு ரகஅத்துக்களையும் நிறைவேற்ற வேண்டும். அவ்விரு ரகஅத்துக்களிலும் முகீம் எதுவும் ஓதாமல் சூரத்துல் ஃபாத்திஹா ஓதும் நேரம் தாமதித்திருந்து ருகூஉ செய்ய வேண்டும். மேலும், முஸாபிர் இமாம் தாம் முஸாபிர் என்பதை முக்ததீகளுக்கு அறிவிப்பது முஸ்தஹப்பாகும்.

ஒரு முஸாஃபிர் இமாமத்துச் செய்ய முற்பட்டால் அவர் ''அதிம்மூ ஸலவாத்துக்கும் ஃப இன்னீ முஸாஃபிருன்'' - ''நான் பயணியாவேன். நீங்கள் உங்கள் தொழுகைகளை முழுமையாக்கிக் கொள்ளுங்கள்'' என்று முக்ததீகளுக்கு அறிவிப்புச் செய்துவிட வேண்டும். அவ்வாறு அறிவிக்காமல் இமாம் இரண்டு ரகஅத்தில் ஸலாம் கொடுத்துவிட்டால் முக்ததீகள் அவரை முஸாஃபிர் எனக் கருதி எழுந்துத் தங்களுடைய மீதி ரகஅத்துகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

## ஜும்ஆத் தொழுகை

வினா : ஜும்ஆவை நிறைவேற்றும் முறை எப்படி?

விடை : வெள்ளிக்கிழமையன்று 'ஜவால்' — அதாவது சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்தபின், நான்கு ரகஅத்துகள் சுன்னத்துத் தொழுகையை நிறைவேற்றிய பின் இமாம் இரண்டு

குத்பாக்களை ஓதி முடித்ததும், இரண்டு ரகஅத்துக்கள் ஃபர்ளு தொழ வேண்டும்.

வினா : அதன் நிய்யத்தை எவ்வாறு செய்வது?

விடை : ஜும்ஆவினுடைய இரண்டு ரகஅத்து ஃபர்ளு தொழுகையை, லுஹருடைய ஃபர்ளுகள் என்னை விட்டும் நீங்குவதற்கு இந்த இமாமைத் தொடர்ந்து அல்லாஹ்விற்காகத் தொழுகிறேன் என்று நிய்யத்துச் செய்து தக்பீர் கட்ட வேண்டும்.

## ஈதுல் ஃபித்ர்

வினா : ஈதுல் ஃபித்ர் தொழுகையின் முறை எப்படி?

விடை : ஈத் பெருநாள் தொழுகையை சூரியன் உதயமான பின்னர் 'ஜவால்' வேளைக்கு முன்னர்த் தொழ வேண்டும். அதன் நிய்யத் "ஈதுல் ஃபித்ர்" அல்லது "ஈதுல் ளுஹா' இவைகளின் தொழுகை இரண்டு ரக அத்துகள் அல்லாஹ்விற்காக இந்த இமாமைத் தொடர்ந்துத் தொழுகின்றேன்" என்று நிய்யத்து செய்து தக்பீர் கட்டி, முதல் ரகஅத்தில் ஸனாவுக்குப் பின்னும், கிராஅத்து ஓதுவதற்கு முன்னும் மூன்று தக்பீர்களும், இரண்டாவது ரகஅத்தில் கிராஅத்துக்குப்பின், ருகூவிற்கு முன்னர் மூன்று தக்பீர்களும் சொல்லித் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

## அய்யாமுத்தஷ்ரீக் என்றால் என்ன?

வினா : 'தஷ்ரீகு'டைய தக்பீர்கள் எவை? அவைகளை எப்பொழுது கூறவேண்டும்?

விடை : 'துல்ஹஜ்ஜு' மாதம் ஒன்பதாம் நாள் தொடங்கி, பதின்மூன்றாம் நாள் அஸர்வரை ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப் பிறகும் 'தஷ்ரீக்' உடைய தக்பீர்களைக் கூறவேண்டும்.



அதாவது, "அல்லாஹு அக்பர் — அல்லாஹு அக்பர் லாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் - அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து" என்று ஒரு முறை இரைந்து ஓதுவது வாஜிப் ஆகும்.

வினா : தனியாகத் தொழுதாலும் கூற வேண்டுமா?

விடை : ஆம்; தனித்துத் தொழுபவரும், ஜமாஅத்துடன் தொழுபவரும், களாவை நிறைவேற்றுபவரும் தக்பீர் சொல்வது வாஜிபாகும்.

வினா : பெண்களுக்கும் இது வாஜிபா?

விடை : ஆம்; பெண்களுக்கும் வாஜிபாகும்; அவர்கள் மெல்லக் கூறவேண்டும்.

## ஜனாஸா தொழுகை

வினா : இறந்து விட்டவரை அடக்கம் செய்வது வரை உள்ள கடமைகள் என்ன?

விடை : நான்கு காரியங்கள் ஃபர்ளு கிஃபாயாவாகும்.

1. குளிப்பாட்டுவது, 2. கஃபனிடுதல், 3. ஜனாஸாவைத் தொழவைத்தல், 4. அடக்கம் செய்தல் ஆகிய இந்நான்குமாகும்.

வினா : குளிப்பாட்டாமலும், அதற்கு கஃபனிடாமலும் ஜனாஸாவைத் தொழ வைத்தால் தொழுகை கூடுமா?

விடை : தொழுகை நிறைவேறாது.

வினா : குளிப்பாட்டாமல், தொழவைக்காமல் அடக்கம் செய்து விட்டால் கப்ரில் தொழ வைத்தால் கூடுமா? கூடாதா?

விடை : மூன்று நாட்களுக்குள் தொழவைக்கலாம்.

வினா : ஜனாஸா தொழுகை நிறைவேறுவதற்கு எத்தனை நிபந்தனைகள் உள்ளன?

விடை : ஐந்து ('ஷர்த்து') நிபந்தனைகள் உள்ளன:

1. மய்யித்து முஸ்லிமாயிருத்தல்.

2. கிப்லா புறமாக, இமாமின் நெஞ்சுக்கு நேராக ஜனாஸா இருக்க வேண்டும்.

3. இந்நிலையில் இருந்து நிய்யத்துச் செய்து நான்கு தக்பீர்கள் சொல்லுதல்.

4. இமாம், மய்யித், தொழுபவர்கள் அனைவரும் தம் 'அவ்ரத்' என்னும் மறைவிடங்களை மறைத்து இருத்தல்.

5. ஹம்து, ஸனா, துஆ ஓதுதல்.

வினா : ஜனாஸா தொழுகையின் நிய்யத்தும் தர்தீபும் யாவை?

விடை : தாயியன் லில்மய்யித்தி மஅல்இமாமி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்—இந்த மய்யித்துக்கு துஆச் செய்தவனாக இந்த இமாமுடன் அல்லாஹ்விற்காகத் தொழுகின்றேன் அல்லாஹு அக்பர் எனக் கூறி, தக்பீர் கட்டி, ஸனா ஓதவேண்டும். அதாவது, 'சுப்ஹான கல்லா ஹும்ம-வபிஹம்திக்க வதபார கஸ்முக்க-வஜல்ல ஸனாவுக்க வலாயிலாஹ கைருக்க' என ஓத வேண்டும்.

இரண்டாவது தக்பீருக்குப்பின் தரூத் ஓத வேண்டும்.

மூன்றாம் தக்பீருக்குப்பின், கீழ்காணும் துஆவை ஓத வேண்டும். அதாவது : ''அல்லாஹும் மஃபிர்லி ஹய்யினா வமய்யித்தினா வஷாஹிதினா வகாயிபினா வஸகீரினா வகபீரினா வஸகரினா வவுன்ஸானா அல்லாஹும்மமன் அஹ்யய்தஹு மின்னா பஅஹ்யிஹி அலல் இஸ்லாம் வமன் தவப்பைத்தஹு மின்னாபத்த வப்பஹு அலல்மான்'' என்றும்,

மய்யித்து சிறுவனாயிருந்தால்,

''அல்லாஹு மஜஅல்ஹு லனா பரத்தன் வஜ் அல்ஹுலனா அஜ்ரன் வஸுக்ரன் வஜ்அல்ஹு லனா ஷாபிஅன் வமுஷப்பஆ''



என்றும், சிறுமியாக இருந்தால்,

''அல்லாஹும் மஜ் அல்ஹாலனா பரத்தன் வஜ் அல்ஹாலனா அஜ்ரன் வஸுக்ரன் வஜ்அல் ஹாலனா ஷாபி அத்தன் வமுஷப்பஆ''

என்றும் ஓத வேண்டும். நான்காம் தக்பீரில் ரப்பனா ஆத்தினா ஓதி ஸலாம் சொல்ல வேண்டும்.

வினா : அவூது என்றால் என்ன? அதன் பொருள் என்ன?

விடை : 'அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்' என்பதாகும். இதன் பொருள் : நான் தூக்கி எறியப்பட்ட ஷைத்தானின் (தீங்கை) விட்டும் காவல் தேடுகிறேன் என்பதாகும்.

வினா : 'ஸனா' என்றால் என்ன?

விடை : சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக்க வ-தபாரகஸ்முக்க வ-தஆலா ஜத்துக்க-வலாயிலாஹகைருக்க

வினா : ருகூவுவில் சொல்லும் தஸ்பீஹ் எது?

விடை : சுப்ஹான ரப்பியல் அளீம், இதன் பொருள் : தூய்மை மிகு எனது இரட்சகன் மேன்மையானவன்.

வினா : ருகூவிலிருந்து நிலைக்கு வரும்போது என்ன சொல்ல வேண்டும்? அதன் பொருள் என்ன?

விடை : தஸ்மிஃ சொல்ல வேண்டும். அதாவது, ''ஸமி அல்லாஹு லிமன் ஹமிதாஹ் ரப்பனா வலக்கல் ஹம்து.''

இதன் பொருள் : யார் அவனைப் புகழ்ந்தானோ அதனைக் கேட்கக் கூடிய இறைவன்; எங்களின் இறைவா! புகழ் அனைத்தும் உனக்கே!

வினா : ஸஜதாவில் சொல்லும் தஸ்பீஹ் எது? அதன் பொருள் என்ன?

விடை : 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்பதாகும். இதன் பொருள் : தூய்மை மிகு எனது இறைவன் உயர்வானவன் என்பதாகும்.

வினா : 'தஷஹ்ஹுது' என்றால் என்ன? அதன் பொருள் என்ன?

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிBபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வBபரக்காத்துஹு. அஸ்ஸலாமு அலைனாவஅலா இBபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹுவ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹு.

பொருள் : ''காணிக்கைகளும், வணக்கங்களும், வாழ்த்துகளும் அல்லாஹு தஆலாவுக்கே உரியன. எங்கள் நபியே, தங்கள் மீது ஸலாம் என்னும் சாந்தியும், அல்லாஹ்வுடைய ரஹ்மத் என்னும் அருளும் அவனுடைய புனிதமும் உண்டாவதாகுக. வணக்கத்துக்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சாட்சியம் கூறுகிறேன். இன்னும் நிச்சயமாக முஹம்மத் (நபி-ஸல்-அம்) அல்லாஹ்வுடைய நல்லடியாரும், அவனுடைய திருத்தூதரும் ஆவார் என்று சாட்சி கூறுகிறேன்.''

வினா : 'தரூத் இப்றாஹீம்' என்றால் என்ன? அதன் பொருள் யாது?

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹீம, வஅலா ஆலி இப்றாஹீம, இன்ன(க்)க ஹமீதுன்ம் மஜீது. அல்லாஹும்ம Bபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா Bபாரக்த்த அலா இப்றாஹீமவஅலா ஆலி இப்றாஹீம இன்ன(க்)க ஹமீதுன்ம் மஜீத்.

பொருள் : எங்கள் இறைவனே! முஹம்மத் (நபி ஸல்-அம்) மீது ஸலவாத் என்னும் ஆசி மொழி அருள்வாயாக. நீ இப்றாஹீம்



(நபி) மீது, இப்றாஹீம் நபி உடைய வம்சத்தார் மீது ஆசி மொழி அருளியதைப் போல் முஹம்மத் (நபி-ஸல்-அம்) உடைய வம்சத்தார் மீதும் அருள்வாயாக. நிச்சயமாக நீயே, புகழப்பட்டவனாகவும் மகிமை உடையவனாகவும் இருக்கிறாய்.

எங்கள் இறைவனே! முஹம்மத் (நபி-ஸல்-அம்) மீது பரக்கத்து என்னும் அபிவிருத்தி அருள்வாயாக. இப்றாஹீம் (நபி) மீதும், இப்றாஹீம் (நபி) உடைய வம்சத்தார் மீதும் நீ பரக்கத்து செய்ததைப் போல், முஹம்மத் (நபி-ஸல்-அம்) உடைய வம்சத்தார் மீதும் பரக்கத்து செய்வாயாக. நிச்சயமாக, நீயே புகழப்பட்டவனாகவும், மகிமையுடையவனாகவும் இருக்கின்றாய்.

விடை : 'துஆயெ மஃஸூரா' என்றால் என்ன? அதன் பொருள் என்ன?

விடை : அல்லாஹும் மஃFபிர்லீ, வலிவாலிதய்ய வலி உஸ்தாதீ வலி ஜமீஇல் முஃமினீன வல் முஃமினாத்தி வல்முஸ்லிமீன வல் முஸ்லிமாத்தி அல்அஹ்யாஇ மின்ஹும்வல் அம்வாத்திஇன்ன(க்)க முஜீபுத்த அவாத்தி பிரஹ்மத்திகயா அர்ஹமர்ராஹிமீன்.

பொருள் : 'எங்கள் இறைவனே! எனக்கும், என்னுடைய தாய் தந்தையருக்கும், என்னுடைய உஸ்தாதாகிய ஆசிரியருக்கும், மற்றும் சகல மூமினான ஆண் (சகோதரர்)களுக்கும், மூமினான பெண் (சகோதரி)களுக்கும், முஸ்லிமான ஆண்களுக்கும், முஸ்லிமான பெண்களுக்கும், ஜீவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், அவர்களில் மரணித்து போனவர்களுக்கும் "மஃFபிரத்' என்னும் பாவமன்னிப்பு அருள்வாயாக. (இறைவனே) நிச்சயமாக நீ, பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்பவனாகவும் இருக்கின்றாய். ஓ கிருபை செய்கிறவர்களுக்கெல்லாம் மகா கிருபை செய்கிறவனே! உன்னுடைய அருளைக் கொண்டு மன்னிப்பாயாக.''

வினா : 'குனூத்' என்றால் என்ன? அதன் பொருள் என்ன?

விடை : அல்லாஹுஃம்ம இன்னா நஸ்தஊனு(க்)க வநஸ்தஃஃகுFபிரு(க்)க வநுஃஃமினு Bபி(க்)க வ ந (த்) தவக்கலு அலை(க்)க, வனுத்னீ அலைக்கல் கைர. வ நஷ்குரு(க்)க வலா நகுFபுரு(க்)க வ நஃஃக்லஉ வ நத்ருக்கு மன்ய் யFப் ஜுஃரு(க்)க அல்லாஹுஃம்ம இய்யா(க்) க நஃஃBபுது; வலக நுஸல்லீ வ நஸ்ஜுஃது வ இலைக்க நஸ்ஆ வ நஹ்Fபிது வநர்ஜுஃரஹ்மத்தக்க வ நக்ஷா அதாBபக்க இன்ன அதாபக்கBபில் குFப்பாரி முல்ஹிக்.

பொருள் : யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடமே உதவி தேடுகின்றோம். மேலும் உன்னிடமே மன்னிப்புத் தேடுகிறோம். உன்னைக் கொண்டே விசுவாசம் கொள்கின்றோம். உன் மீதே சார்பு கொண்டுள்ளோம். சிறப்பு அனைத்தையும் கொண்டு உன்னை வணங்குகிறோம். நாங்கள் உனக்கு மாறு செய்யமாட்டோம். உனக்கு மாறு செய்தவனை நாங்கள் கை விட்டுவிடுவோம். யா அல்லாஹ்! உன்னையே வணங்குகிறோம். உன்னையே தொழுது, உனக்கே சிரவணக்கம் (சஜ்தா) செய்கிறோம். மேலும், உன்னையே நம்பியிருக்கின்றோம். நிச்சயமாக, உனது கொடிய தண்டனையானது காFபிர்களையே, தெய்வ நம்பிக்கை யற்றவர்களையே சேரக் கூடியதாகும்.

## முஸ்லிமின் கடமை

வினா : ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிம்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

விடை : அவைகள் பல உள்ளன, அவற்றுள் சில வருமாறு: - ஒரு முஸ்லிம் நோயுற்றால் அவரிடம் சென்று நலம் வினவுதல். 2. அவர் இறந்து விட்டால் ஜனாஸாவைப் பின் தொடர்வது. 3. அழைத்தால் விருந்தை ஏற்றுக் கொள்வது. 4. சலாமுக்குப் பதில் சொல்வது. 5. தும்மினால் 'யர்ஹமுக்கு முல்லாஹ்' என பதில் கூறுவது. 6. தான் விரும்புவதையே தன் முஸ்லிம்



சகோதரருக்கும் விரும்புவது. 7. தாம் வெறுக்கும் ஒன்றை மற்றவர்களுக்கு விரும்பாதிருப்பது. 8. தன் நாவாலும், கையாலும் பிற முஸ்லிமுக்குத் தீங்கிழைக்காதிருப்பது. 9. இழிவு உண்டாக்காதிருப்பது. 10. ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் குணவொழுக்கத்திற்குத் தக்கவாறு கண்ணியம் செய்வது. 11. தன்னைவிட வயதில் மூத்தவர்களுக்குக் கண்ணியம் செய்வது. 12. சிறியவர்களிடம் அன்பு காட்டுவது. 13. எல்லாரிடமும் முகமலர்ச்சியுடன் பழகுவது. 14. வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்றுவது. 15. பிறரின் குறைகளை வெளிப்படுத்தாமல் இருப்பது. 16. ஒரு முஸ்லிமின் உயிருக்கோ, உடைமைகளுக்கோ அநியாயம் செய்தால் உடனே அதிலிருந்து அவரை விலக்குவது. 17. கண்ணியத் திற்குரியவர்களுக்குக் கண்ணியம் செய்வது. 18. ஒருவர் கைலாகு (முஸாபஹா) செய்தால் அவருக்கு கைலாகு கொடுத்து அவரின் நலன்களை வினவி, அவரின் மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் பங்கு பெறுவது.

## ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய கடமைகள்:

வினா : உஸ்தாதுகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

விடை : அவை பல உள்ளன; சிலவற்றைக் கூறுவோம். 1. ஆசிரியரின் அறிவுக்கு முன்னே தன்னுடைய அறிவை ஒன்றுமில்லாததாக எண்ண வேண்டும். 2. ஆசிரியரிடம் பணிவுடன் நடந்து கொள்வது. 3. ஆசிரியருக்கு முன்னால் தன்னுடைய சிறுமையை வெளிக்காட்டக் கூடாது. 4. ஆசிரியருக்கு முன் எம்முறையில் கண்ணியம் காட்டு கிறோமோ அவ்வாறே அவருக்குப் பின்னும் கண்ணியம் காட்ட வேண்டும். 5. ஆசிரியரைப் பற்றிக் குறை கூறாதிருப்பது. 6. ஆசிரியர் கூறுவதை கவனமாகக் கேட்பது. 7. ஆசிரியர் மனம் வருந்துமாறு ஏதும் சொல்லி விட்டால் அதைப் பொருட்படுத்தா திருப்பது. 8. அவர் உயிருடன் இருக்கும் போது அவரின் நீண்ட

ஆயுளுக்கும் உடல் நலத்துக்கும் துஆச் செய்வது. 9. அவரின் மரணத்திற்குப் பின் அவரின் பொருட்டு பாவ மன்னிப்புத் தேடுவது.

## 'பித்அத்' என்றால் என்ன?

வினா : 'பித்அத்' என்றால் என்ன?

விடை : 'பித்அத்' என்பது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவது போன்று புதியவை ஒவ்வொன்றும் 'பித்அத்' என்னும் அனாச்சாரமாகும். மார்க்கத்தை அழிக்கக் கூடிய செயல்கள் யாவும் 'பித்அத்'துகளேயாகும்.

கேள்வி : அவைகளில் எத்தனை வகை உள்ளன?

விடை : அவை 'பித்அத்தே ஹஸனா'. 'பித்அத்தே செய்யிஆ' என இரு வகைப்படும்.

வினா :'பித்அத்தே ஹஸனா' எவை?

விடை : 'சுன்னத்வல்ஜமாஅத்தி'ன் அடிப்படைக்கும் சட்டங்களுக்கும் மாறுபடாமல் இருந்து அதன்மீது 'கியாஸ்' என்னும் அனுமானம் செய்வதற்கு 'பித்அத்தே ஹஸனா' என்று கூறப்படும். அவைகளுக்கு மாற்றமான செயல்கள் 'பித்அத்தே செய்யிஆ' எனக் கூறப்படும்.

வினா : 'பித்அத்தே ஹஸனா' எத்தனை வகை?

விடை : அவை ஐந்து வகையாகும். 1. வாஜிப்: அதாவது, குர்ஆன், ஹதீஸ்களின் விளக்கங்களைஅறிந்து கொள்வதற் குரிய 'நஹ்வு', 'ஸர்ஃபு' - சொல்லிலக்கணம், அணியிலக்கணம் முதலியவற்றைக் கற்பது.

இவ்விலக்கணங்களைக் கற்காவிட்டால் நம்மால் குர்ஆன், ஹதீஸ்களின் விளக்கங்களை முறையாக அறிந்து கொள்ள முடியாததுடன் அவற்றில் தவறு நிகழ்வதற்கும் வாய்ப்பேற்பட்டுவிடும். எனவே, இவற்றைக் கற்பது 'பித்அத்தே வாஜிப்' ஆகும்.



2. முஸ்தஹப் : அதாவது, அவ்விலக்கணங்களைக் கற்பதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் மத்ரஸா கட்டுவது, அதைக் கட்டுவது 'பித்அத்தே முஸ்தஹப்' எனக் கூறப்படும்.

3. மக்ரூஹ் : பள்ளிவாசல்களைக் கலை அம்சத்துடன் வண்ண விளக்குகளுடன் அமைப்பது, அதற்கு 'பித்அத்தே மக்ரூஹ்' எனக் கூறப்படும்.

4. 'முபாஹ்' : சுவைமிகு உணவு உண்பது, அழகான ஆடைகள் அணிவது, இவ்வாறு சுவைமிகு உணவை உண்பதும், வண்ண ஆடைகள் அணிவதும் மார்க்கத்தில் நன்மையுமில்லை; தீமையுமில்லை. சுன்னத்தான வழிமுறைகளைப் பின்பற்றித் தூய வெண்மையான ஆடைகள் அணிவதே சிறந்தது.

5. ஹராம் : சுன்னத்து வல் ஜமாஅத்துக்குப் புறம்பாக மத்ஹப்களை இழிவுபடுத்துவது.

## பெரும் பாவங்கள் பற்றிய விளக்கம்

வினா : 'கபீரா' என்னும் பெரும் பாவங்கள் எத்தனை வகை?

விடை : 'கபீரா' என்னும் பெரும்பாவங்கள் மூன்று வகை:

1. 'குப்ர்' 'ஷிர்க்', இவற்றின் காரணமாக ஈமான் அழிந்து விடுகின்றது. அவற்றிலிருந்து விலகித் தம் அறியாமைக்கு வருந்தி அழுது 'தவ்பா' என்னும் பாவமீட்சித் தேடாதவரை அவன் முஸ்லிமாகமாட்டான்.

2. அல்லாஹ்வுடைய அடியார்களின் உரிமைகளைப் பறிப்பது; அநியாயம் செய்வது; கொலை செய்வது; அவர்களின் உடைமைகளைப் பறிப்பது; அவர்களின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதுமாகும்.

3. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்வது, ஆக, மேற்கூறிய மூன்றில், இரண்டு செயல்களுக்காக அல்லாஹ்விடம் 'தவ்பா' செய்தாலன்றி மன்னிப்புக் கிடைக்காது. ஆனால், அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணித்தவனை அல்லாஹ் நாடினால் மன்னிக்கலாம்; அல்லது தண்டிக்கலாம்.

தனது அடியார்களுக்குத் தீங்கிழைத்துவிட்ட மற்றொரு அடியான், தீங்கிழைக்கப்பட்ட அடியானிடம் தீங்கிழைத்தவன் சென்று, தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டு அவனின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளாதவரை அல்லாஹ் தீங்கு செய்த அடியானின் பிழையை மன்னிக்கவே மாட்டான். காரணம், இஃது ஓர் அடியானுக்கும், மற்றோர் அடியானுக்குமிடையேயுள்ள பிரச்சனையாகும்.

ஏனென்றால், நபி (ஸல்) அவர்கள், ''மறுமை நாளில் ஓர் அழைப்பாளர் 'அர்ஷி'லிருந்து ஓர் அறிவிப்புக் கொடுப்பார். ''ஓ! முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தவர்களே! நீங்கள் அனைவரும் ஆண் பெண்களாகிய முஃமினான அடியார்களிடம் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளுங்கள்; ஏனென்றால், அல்லாஹ் உங்களைப் பொருந்திக் கொண்டான்; உங்களின் மீது அருள்பாலித்து விட்டான்; உங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றியவர்களாக சுவர்க்கத்தில் நுழையுங்கள்'' என்று கூறினார்கள்.

வினா : 'கபீரா' என்னும் பெரும் பாவங்கள் எவை?

விடை : பெரும் பாவங்கள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கூறுகின்றோம்: 1. பெற்றோரை நோவினைச் செய்வது. 2. பொய்ப் பேசுவது. 3. கொலை செய்வது. 4. பொய் சத்தியம் செய்வது. 5. சூதாடுவது. 6. பொய் சாட்சி கூறுவது. 7. புறம் பேசுவது, 8. ஆடல் பாடல், இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது. 9. இந்துக்கள் நடத்தும் கூத்துகளைப் பார்ப்பது. 10. பித்அத்துகள் நடக்கும் கூட்டத்திற்கு செல்வது.

11. குர்ஆனை ஓதி மறந்து விடுவது.

12. அண்டை வீட்டாருக்கு தொல்லைக் கொடுப்பது. 13. அனாதைகளின் பொருளைத் தின்பது. 14. வட்டியால் வரும் வருமானத்தில் தின்பது, குடிப்பது, உடுத்துவது. 15. சூனியம் செய்வது. 16. திருடுவது. 17. பெரும் பாவம் செய்து அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளான பாவிக்குப் பரிந்து பேசுவது. 18. சிறுபாவங்களை இலேசாகக் கருதுவது.



19. போதைப் பொருள்களைத் தின்பது அல்லது குடிப்பது. 20. முஃமின்கள் மீது அநியாயம் செய்வது. 21. பத்தினிப் பெண்களின் மீது அவதூறு கூறுவது. 22. பிள்ளைகளைக் கொல்வது.

இன்னும் இவைப்போல் பெரும் பாவங்கள் பல இருக்கின்றன.

வினா : 'குப்ரா'ன செயலால் ஒருவனின் ஈமான் அழியுமா?

விடை : ஆம்! குப்ரான செயலால் ஈமான் அழிந்து விடும். மேலும், அவனின் தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ்ஜு, சதகா போன்ற எல்லா நற்செயல்களும் அழிந்து விடும். மேலும், அவனின் திருமண உறவும் நீங்கி விடும் அவன் விரைவாகத் தன் தவறை உணர்ந்துத் 'தவ்பா' செய்து, கலிமா மொழிந்து இஸ்லாத்தில் இணைய வேண்டும்.

அவன் தனது திருமணத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு குப்ர் கலிமா மொழிந்துத் தவறுகளை உணர்ந்துத் தவ்பா செய்யாமல் இருந்து விடுவானாயின் அவனை ஷரீஅத்தின் சட்டப்படி வெட்டிவிட வேண்டும்.

''எவர் தம் மார்க்கத்தை விட்டும் மாறி விடுகின்றாரோ, அவருடைய கழுத்தைத் துண்டித்து விடுங்கள்'' என்று நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜைது இப்னு அஸ்லம் (ரலி)
நூல் : முஅத்தா

அம்மனிதன் குப்ரிலேயே இறப்பெய்து விட்டால் அவனை முஸ்லிம்களின் அடக்கத்தலத்தில் (கப்ருஸ்தானில்) அடக்கம் செய்யக் கூடாது. அவனுக்கு ஜனாஸா தொழுகையும் கூடாது.

வினா : 'முரீது' என்றால் என்ன? அதைக் கொடுப்பவர் யார்? அவர் எத்தகையவராக இருக்க வேண்டும்?

விடை : 'முரீது' கொடுக்கும் 'ஷைக்' என்பவருக்கு ஐந்து வகையான தன்மைகள் இருந்திட வேண்டும். அவ்வைந்துத்

தன்மைகள் எவரிடம் இருக்காதோ அவர் உண்மையான 'ஷைக்' அல்ல; மக்களை வழி கெடுக்கும் 'தஜ்ஜால்' ஆவார்.

அவ்வைந்து வகைத் தன்மைகள் :- 1. அவர் ஷரீஅத் சட்டதிட்டங்களை (ஏவல் விலக்கல்களை) நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். 2. ஹகீகத்தின் ஆணிவேரான அடிப்படைகளைத் தெளிவாக அறிந்திருப்பதுடன் அவற்றை நழுவ விடாமல் அவற்றை நாவால் மொழிய வேண்டும். 3. தம்மிடம் வருபவர்களை முகமலர்ச்சியுடனும், நற்குணத்துடனும் வரவேற்று விருந்தோம்பல் செய்பவராக இருக்க வேண்டும். 4. ஏழை எளியவர்களிடம் தம் பணிவையும், நற்பண்பையும் வெளிக்காட்டி மகிழ்ச்சியுடன் பேசி உரையாடி, உறவாடிட வேண்டும். 5. மிஸ்கீன்களிடம் தம் பெருமையை வெளிக்காட்டாமல் சொல்லிலும் செயலிலும் தம் பணிவை வெளிப்படுத்த வேண்டும்.

– ரவ்ளத்துன்னாளிரீன்

மேற்காணும் தன்மைகளுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் சுன்னத்துக்களைப் பேணுகின்றவராகவும், ஐவேளைத் தொழுகைகளைப் பேணுதலுடன் தொழுது வருவதுடன், நஃபிலான வணக்கங்களில் ஆர்வமுள்ளவ ராகவும், தம் முரீதுகளின் நல்வாழ்க்கையில் கவலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அவ்வாறின்றி, முரீதுகளின் பைகளின்மீது கவனமுள்ளவ ராகவும், பெருந்தீனிக்காரராகவும், தூக்கத்தில் இன்பங்காணுபவ ராகவும், பெண்களிடத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் கலிமாவின் இரகசியத்தைச் சொல்லிக் கொடுப்பதாகக் கூறி பெண்களைத் தனிமையில் சந்திக்கும் பழக்கம் கொண்டவராக இருப்பாராயின் அவர் உண்மையான ஷைக் அல்ல, அவன் வழிகெடுக்கும் ஷைத்தானாவான்.

இக்கால ஷைகுமார்களில் பலர் ஷோக்மார்களாகத்தான் உள்ளனர்; அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.